அன்பளிப்பு 40 p.

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 29. 05. 1992



தூக்குங்கள் துப்பாக்கி, துணிந்து விட்டால் எவன் பாக்கி,
தாக்குங்கள் எதிரிகளை, தகர்த்தெறிவோம் தீமைகளை!

## வற்றாப்பளை அம்மன்
# கோயில் மீது செல் அடி !
## 23 பேர் கொல்லப்பட்டனர், 30 பேர் படுகாயம்!

வற்றாப்பளை அம்மனுக்கு பொங்கலிட என்று திரண்டு இருந்த பக்தர்கள் மேல் சிறிலங்கா இராணுவம் இக் கோயிலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்திலுள்ள இராணுவமுகாமிலிருந்து 5 செல்கள் ஏவினர். இதில் ஒரு செல் கோயில் வீதியில் திரண்டு நின்ற மக்கள் மேல் வந்து விழுந்து வெடித்த

தொடர்ச்சி 5ம் பக்கம் ..

# தமிழ்த்தேசிய தலைவராக பிரபாகரன்
# தமிழினத்தின் புரட்சி வடிவமாக புலிகள்
# இந்திய அரசு அங்கீகாரம்

"இந்தியா அஞ்சுவது புலிகளுக்கல்ல. இந்தியா, தமிழ்த் தேசியத்தின் எழுச்சியின், புரட்சிவடிவமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளையும் தலைவர் பிரபாகரனையும் அங்கீகரித்து அந்த வடிவத்தில் நோக்குகின்றது" எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

அவ்வறிக்கை மேலும் கூறியதாவது: தமிழ் நாட்டு இளைஞர் சிலருக்கு யாழ்ப்பாணத்தில் ஆயுதப்பயிற்சி அளித்ததாகவும் தமிழ்நாட்டில் பிரிவினை வாதத்தை தூண்டி விட்டதாகவும் இந்தியா தமிழீழ விடுதலைப்புலிகள் மீது அபாண்டமாக பழிகளைச் சுமத்துகின்றது. இந்தக் குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லை.

### தலையீட்டாளர் யார்?

தமிழ்த் தேசிய இனப்பிரச்சனையில் அதாவது ஒரு அந்நிய நாட்டுப் பிரச்சனையில் இந்திய அரசு தலையிட்டது. அமைதிப் படை என்ற போர்வையில் தமிழர் தாயகத்துக்கு ஒரு ஆக்கிரமிப்பு படையை அனுப்பி வைத்தது. போர் தொடுத்த விடுதலைப்புலிகளையும் தமிழீழ தேசியப் போராட்டத்தையும் நசுக்க முனைந்ததும் இந்திய அரசுதான். இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்தில் பத்தாயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்ததும் இந்திய அரசுதான் இவ்விதம் தமிழ் மக்களுக் கெதிரான பெரும் வரலாற்று தவறுகளை இழைத்துவிட்டு விடுதலைப் புலிகள் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்குவதாக டில்லி ஆட்சிப்பீடம் குற்றம் கூறுகின்றது. இதில் எவ்வித உண்மையும் இல்லை. விடுதலைப் புலி

தொடர்ச்சி 9ம் பக்கம்..

# தமிழர் தாயகமா? வடக்கு-கிழக்கு இணைப்பா?
## சிங்கள இயக்கங்கள் எதிர்ப்பு


"சிங்கள மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்களுடைய தாயகம் என்பதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அத்துடன் வடக்கு கிழக்கை இணைப்பது என்பதும் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது ஒன்று. அப்படி இணைப்பதானாலும் தீவு முழுவதிலுமுள்ள மக்களிடையேயும் வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும். இதை விடுத்து வடக்கு கிழக்கை இணைப்பது என்ற அடிப்படையில் இனப்பிரச்சனைக்கு எடுக்கப்படும் எந்த தீர்வையும் சிங்கள மக்கள் ஒரு பொழுதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்."

இவ்வாறு சிங்கள பாதுகாப்புச் சங்கம் என்னும் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அத்துடன் இவ் அமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ சிங்கள அரசு பேச்சுவார்த்தை எதையும் நடாத்தக் கூடாது எனவும் தன் அறிக்கையில் வற்புறுத்தியுள்ளது.

### அநுராதபுரத்துடன் இணைக்கவும் கெல - உறுமய கோரிக்கை

இதற்கிடை "கெல - உறுமய" என்னும் அநுராதபுர ராஜதானியை மீட்டெடுக்கும் நோக்கத்

தொடர்ச்சி 9ம் பக்கம்.






மக்கள் புகார்களைப் பதியும் கட்டளைப் பணியக பெண் பொலிசார்

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



## தடை ஏற்படுத்தப்போகும் தடை

உலக வரலாற்றில் சத்தியங்கள் வெல்லப்பட முடியாத பொழுது, அடக்குமுறை ஆட்சியாளர்களால் திணிக்கப்படுவது வழமை. 1978ல் தமிழீழமக்கள் சத்தியத்தின் வடிவாக தமிழீழ விடுதலைப்புலிகளாக உருவெடுத்தவுடன் பயங்கரவாதத் தடைச் சட்டம் சிறிலங்கா அரசால் அமுலாக்கப்பட்டது. இதன் விளைவு விடுதலை உணர்வு என்பது அடக்க அடக்க அடங்காத அனல்காற்று என்பதை சிறிலங்கா அரசு உணர்ந்துள்ளது. 1978ல் சில பத்துக்களாகவே காணப்பட்ட விடுதலைப்புலிகளின் எண்ணிக்கை இன்று பல்லாயிரக்கணக்காக வளர்ந்துள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் தமிழீழம் உள்ளது என்ற உண்மை உலகுக்கு உணர்த்தப்பட்டுள்ளது.

இன்று தமிழகத்திலே மீண்டும் ஒரு அடக்குமுறை. அப்பட்டமான அரசியல் காடைத்தனம். தமிழக மக்களூடாக இந்திய ஒருமைப்பாட்டில் தலையிடுவதாக கற்பனைக் கதை கூறி விடுதலைப்புலிகள் இயக்கத்தை இந்தியா தடை செய்துள்ளது. தமிழகத்திலே நிலை கொண்ட இயக்கம் விடுதலைப்புலிகளல்ல என்பதை உலகு அறியும். ஆகவே தமிழகத்திலே தடை என்றால் யாருக்குத் தடை? தமிழகமக்களின் இனமான உணர்வுக்குத் தடை. 'பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு" என்று நூற்றாண்டுக் கவிஞன் பாரதிதாசன் பாடினானே. அந்த இனத்துடிப்புக்குத்தடை. எனவே தமிழ்மக்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு விதிக்கப்பட்ட விலங்கு என்றே இதைக்கருத வேண்டும்.

சிறிலங்காவின் 1983 யூலை இனஅழிப்பு நடவடிக்கையால் பல்லாயிரக்கணக்கானோர் தமிழகத்தில் தஞ்சம் அடைந்தனர். இவ் அகதிக் கோலத்திற்கான காரணத்தை மாற்றவிரும்பிய போராளிகளுக்கு தமிழக அரசும் மத்திய அரசும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தது. ஆனால், இந்திரா காந்தியின் மறைவிற்குப் பின் இந்தியா தனது ஆதிக்க உணர்வுக்கும் சுய அரசியல் லாபத்திற்கும் போராளிகளை பகடைக்காய்கள் ஆக்கியது. சிங்கள பௌத்த பேரினவாத அடக்குமுறைக்கு எதிராக விடுதலை தேடிய உள்ளங்கள் இன்னொரு அடக்குமுறைக்கு ஆளாக மறுத்தன. இதுவே புலிகளுக்கும் இந்தியாவிற்கும் உறவில் விரிசல் ஏற்பட காரணமாயிற்று. இந்நேரத்தில் இந்தியாவின் மனோநிலையை அறிந்த ஜே. ஆர் புலிகளிடமிருந்து ஆயுதங்களை பறிப்பதற்கென மறைமுகமாக அமைதிப்படையை அழைத்தார். புலிகளின் பங்குபற்றல் இல்லாமலே இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு தமிழீழமக்கள் மேல் திணிக்கப்பட்டது. காந்திய வழியில் எதிர்த்த திலீபன், அன்னை பூபதி போன்றோர் உயிர்ப் பலியாக்கப்பட்டனர்.

இந்நிலையில் மண்மீட்கப் புறப்பட்ட வேங்கைகள் தம் கடமையைத் தொடங்கினர். எதிர்நிற்க முடியாத இந்திய இராணுவம் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சூறையாடல், சித்திரவதை என தமிழீழமக்களை படுத்தாதபாடு படுத்தியது. ஈற்றில் சிறிலங்கா அரசே இந்திய இராணுவத்தை வெளியேற்றமுடியாமல் கையைப் பிசைந்தநேரத்தில் இராணுவ ராஜதந்திர வழிகளில் புலிகள் விரட்டி அடித்தனர்.

உலகின் நான்காவது இராணுவத்திற்கு ஏற்பட்ட தோல்வி அவமானம், தனது ஆதிக்க நோக்கை இனம் கண்டு கொண்ட புலிகளின் இராஜதந்திரத்தை கண்டு கொண்டதனால் ஏற்பட்ட ஆத்திரம் என்பன இந்தியா புலிகளின் மேல் காழ்ப்புணர்ச்சி கொள்ள காரணமாயிற்று. எல்லாவற்றிற்கும் மேலாக கடந்த நாற்பது ஆண்டுகளாக இந்தியாவும், தமிழீழ மக்கள் பூரணவிடுதலை பெறக்கூடாது. அப்படிப் பெற்றால் தமிழ் நாட்டில் இனமான உணர்வு விடுதலை உணர்வை தூண்டும் என்ற சுயலாப அரசியல் சிந்தனைகளோடு செயலாற்றி வருவதே தற்போதைய நடைமுறைகளுக்கான அடிப்படை எனலாம்.

சர்வதேச சமூகம், புலிகளும் இலங்கை அரசும் தான், அமைதிப் பேச்சுக்களுக்கான தொகுதி என்ற ரீதியில், எடுக்கும் அமைதி முயற்சிகளை சீர்குலைப்பதற்கே இந்தியா இத்தகைய முயற்சியை செய்துள்ளது. ஆயினும், இந்தியாவின் இச்சதி அதற்கே குழி பறித்து, இத்தடை தமிழக மக்கள் இந்திய அரசியல் சாசனத்திற்கு இடும் தடையாக மாறலாம் என்பதே யதார்த்த ரீதியான அரசியல் எதிர்பார்ப்பாய் உள்ளது.

## காவலை மீறி நுழைந்த "வான்"

### - சிறிபெரம்புத்தூரில் பரபரப்பு -

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட இடத்தில் முதலாவது ஆண்டு நிறைவை ஒட்டி பலத்த காவல் போடப்பட்டிருந்தது. திடீரென இக்காவல் கட்டுக்களை உடைத்துக் கொண்டு வெள்ளை வான் ஒன்று உள்நுழைந்தது.

திகைத்து நின்ற மக்கள் முன் கட்டுக்கட்டாக துண்டுப்பிரசுரங்களை வீசிய இவ் வான் கண் இமைக்கும் நேரத்தில் பறந்து விட்டது.

அத் துண்டுப்பிரசுரத்தில் ராஜீவ் காந்தியால் ஏவப்பட்ட அமைதிப் படை என்ற இந்திய இராணுவம் தமிழீழத்தில் செய்த கொடுமைகள் விபரிக்கப்பட்டிருந்தன. பாஸிஸவாதி, இரத்தக் காட்டேரி போன்ற சொற்கள் ராஜீவை குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தன. அமைதிப்படையின் கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள் போன்ற சித்திரவதைகளால் ஏற்பட்ட உணர்வினாலேயே "தானு" நீதி கேட்கும் கண்ணகியாக மாறினாள் என குறிப்பிடப்பட்டிருந்து. தானுவின் உயிர்த்தியாகத்திற்கு அஞ்சலியும் அவளின் துணிச்சலுக்கு பாராட்டும் தெரிவிக்கப்பட்டிருந்து.

மத்திய அரசின் புலி இயக்கத் தடையையும் பொருட்படுத்தாது இனமான உணர்வுள்ள தமிழக மக்களால் வெளியிடப்பட்ட இத் துண்டுப்பிரசுரம், எத்தகைய தடைகள் இடப்பட்டாலும், தமிழகத்தில் மக்களின் இனஎழுச்சியை அடக்கமுடியாது என்பதற்கு இது நல்ல உதாரணம் ஆகும்.

## கொம்படியில் குண்டுவெடிப்பு தேசத்துரோகிகளின் சதி

கொம்படியில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கடை ஒன்றில் பொதிகள் போல் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததினால் மூன்று சிறுவர்கள் உட்பட 15பேர் பலியாகினர். 30பேர் படுகாயமுற்ற நிலையில் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சிங்கள இனவாத அரசாலும், தேசத்துரோகிகளாலும் திட்டமிடப்பட்டு எமது மக்களிற்கு எதிராக இந் நடவடிக்கை நடத்தப்பட்டிருக்கிறது. இதற்கு எமது இனத்தின் துரோகக் கும்பல்கள் பெரும் துணை நின்று செயற்பட்டிருக்கின்றன. எமது தாயகத்திற்குள் மக்களோடு மக்களாக எதிரி புகுந்துள்ளான் என்பதையே இக்குண்டு வெடிப்பு எமக்கு பாடம் புகட்டுகிறது. எனவே, தமிழ் மக்கள் இப்படியான துரோகிகளை இனம் கண்டு தமிழீழ காவல்துறையிடமோ அல்லது விடுதலைப்புலிகளிடமோ உடனடியாக அறிவிக்குமாறு வேண்டுகின்றோம். தெருவிலோ பொது இடங்களிலோ அனாதராவாகக் கிடக்கும் பொருட்களை கையில் எடுக்காது உடனடியாக அறிவிப்பீர்களாயின் வெடிவிபத்து நடைபெறாது நடப்பதற்கு நாம் துணை செய்யமுடியும். கொம்படியில் நடைபெற்ற சம்பவமானது அரசினது நேரடியான தாக்குதல்களைப்போல (பொம்பர், செல்) இல்லாமல் மிகவும் ஆபத்தானதாகும். இதற்கு நேரடிக் கருவியாக துணை சென்றவர்கள் வேறுயாருமல்ல நம்மிடையே வாழும் தமிழினத்துரோகிகள் தான். ஆகவே, இவர்களை இனியும் எம்மத்தியில் நடமாட விடுவதன் மூலம் மேலும் இதைப்போன்ற பல விளைவுகள் ஏற்படுவதற்கு முன்பே இவர்களை இனங்காட்டுவோமாக.

இவ்வாறான அறிக்கை ஒன்றை தமிழீழ விடுதலைப்புலிகள் மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப்பிரிவு வெளியிட்டுள்ளது.

## மனித உரிமை பற்றிய தலையீட்டுக்கு ஜனாதிபதி எதிர்ப்பு

சர்வதேச நாடுகள் அதிலும் குறிப்பாக ஐரோப்பிய பொருளாதாரக் கட்டமைப்பு நாடுகள் கனடா, அவுஸ்திரேலியா போன்றவை நிதி உதவிகளை வழங்கும் பொழுது நிதி உதவியைப் பெறும் நாடுகளில் நிலவும் மனித உரிமைகளின் நிலைபற்றி கருத்தில் கொள்வது வழமை.

இதனை இலங்கை ஜனாதிபதி ரணதுங்க பிரேமதாசா கடுமையாக எதிர்த்து வருகிறார். சமீபத்தில் இலங்கையில் பணிபுரியும் தென்கிழக்காசிய தூரகிழக்கு நாடுகளினது தூதுவர்களுடன் உரையாடிய இலங்கை ஜனாதிபதி "உள்நோக்க நிபந்தனைகள் இல்லாத நிதி உதவி பற்றி நாம் பொது அணுகுமுறை ஒன்றைப் பின்பற்ற வேண்டும். மனித உரிமைகள் எனும் கருவி மூலமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மீது நிதி உதவி தொடர்பாக விதிக்கும் நிபந்தனைகளை எதிர்க்க வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டுள்ளார். சீனா, பர்மா, தென்கொரியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா ஆகியோருடனான ஜனாதிபதியின் கலந்துரையாடலின் பொழுதே இவ் ஆலோசனையை இலங்கை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.



## விற்பனைக்கு


### "அரசு அமைப்பதற்கான தமிழர்களின் தாகம் " நூல்

விஸ்வநாதன் உருத்திரகுமாரன் எழுதிய, யூகோஸ்ஸிலேவிக்கியா, முன்னய ரஸ்யா ஆகியவற்றில் இருந்து தோன்றிய புதிய அரசுக்களின் அடிப்படையில், அரசு அமைப்பதற்கான தமிழர்களின் தாகம் என்ற ஆங்கில நூல் விற்பனைக்கு வந்துள்ளது. சர்வதேச தமிழர் ஒன்றியத்தின் வெளியீடாக வந்துள்ள இந்நூல் இன்றைய காலகட்டத்தில், வரலாற்றுப் போக்கில் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டை விளக்குகின்றது.

■ இதன் விலை: $5.00 /£ 2.50 இதனை பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். ■


INTERNATIONAL FEDERATION OF TAMILS
17, BIRCHVIEW CLOSE, YATELEY, CAMBERLEY, SURREY GU17 7DL,
UNITED KINGDOM.

STUMBLING BLOCKS ON THE ROAD TO PEACE. No.2 in a series.

# வைப்புக்களை மீளப்பெறுவதில் வாடிக்கையாளர் போட்டி; வங்கிப் பரீட்சை ரத்தானதால் வடக்கு ஊழியர் பாதிப்பு!



இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய இரு அரச வங்கிகளும்வங்குரோத்து நிலைமையடைந்துள்ளதாக நிதியமைச்சரும் பிரதமருமான டி. பி. விஜயதுங்க அறிவித்ததையடுத்து இவ்விரு வங்கிகளும் மக்கள்மயப்படுத்தப்படவுள்ளதாக வெளியான செய்திகளினால் இவ்விரு வங்கிகளிலும் வைப்பிட்டிருந்த பல வாடிக்கையாளர்கள் தமது வைப்புக்களை மீளப்பெற்றுவிட்டதாக கொழும்பிலிருந்து கிடைத்த செய்தியொன்று தெரிவிக்கின்றது.

கொழும்பு நகரில் மட்டும் பல மில்லியன் ரூபா பெறுமதியான வைப்பு இவ்விரு வங்கிகளிலுமிருந்து இவ்விதமாக வாடிக்கையாளர்களினால் மீளப் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ் மாவட்டத்தில் 50 மில்லியன் ரூபா

நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள வாடிக்கையாளர்களும் தமது வைப்புக்களை மீளப்பெறுவதில் பின் நிற்கவில்லையெனவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் இலங்கை வங்கியிலிருந்து சமீப காலத்தில் சுமார் 50 மில்லியன் ரூபா வாடிக்கையாளர்களினால் மீளப்பெறப்பட்டுள்ளதாகவும் அந்த கொழும்புச் செய்தி தெரிவிக்கின்றது.

இது தொடர்பான மேலதிகத் தகவல்களைப் பெறும் பொருட்டு வங்கி உயரதிகாரியொருவரைச் சந்தித்த போது பெறப்பட்ட விபரங்களை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

### மாதாந்தம் 75 மில்லியன் தேவை

யாழ். மாவட்டத்தில் இலங்கை வங்கியைப் பொறுத்தவரையில் மாதாந்தம் அதன் கொடுப்பனவுக்கு சுமார் 75 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. இதில் 25 மில்லியன் ரூபா வைப்புக்கள் மூலம் பெறப்படுகின்றது.

### 50 மில்லியன் வரவேண்டும்

மிகுதி 50 மில்லியன் ரூபாவும் கொழும்பிலிருந்தே பெறப்பட்டு வந்தது.

### ஆனால் வந்ததோ 10 மில்லியன் மட்டுமே

ஆனால் கடைசியாக கடந்த செப்டெம்பரில் 10 மில்லியன் ரூபா மட்டுமே கொழும்பிலிருந்து பணமாக இங்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் பின்னர் இது வரை இங்கு பணம் அனுப்பப்படவில்லை.

இதனால் பணக்கொடுப்பனவுகளை யாழ் மாவட்டத்தில் மட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### 60 தமிழ் ஊழியர்கள் பாதிப்பு

இவற்றை இங்கு நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு கடைசி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டன. இதனால் இப்பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்த வடபகுதி ஊழியர்களில் சுமார் 60 பேர் வரையில் பரீட்சைக்குத் தோற்ற முடியாமல், பதவியுயர்வுகளைப் பெறமுடியாத நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். கடந்த நவம்பரில் நடாத்தப்பட்ட வங்கியாளர் பரீட்சை முடிவுகள் நேற்று கொழும்பில் வெளியிடப்பட்டு விட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### அடுத்த பரீட்சையாவது இங்கு நடக்குமா?

அடுத்த வங்கியாளர் பரீட்சை இவ்வருடம் மே மாதம் நடாத்தப்படல் வேண்டும். அதற்குத் தோற்றுவதற்கு யாழ் மாவட்டத்திலிருந்து சுமார் 80 வங்கி ஊழியர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

### முகாமையாளராக சிங்களவர்

தீவுப் பகுதிகளுக்கென காரைநகரில் இலங்கை வங்கிக் கிளையொன்று திறக்கப்பட்டுள்ளது. அந்தக் கிளையின் முகாமையாளராகச் சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

### கடந்த வருடம் கிளிநொச்சி

யாழ். மாவட்டத்துடன் இணைந்திருந்த கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளை கடந்த வருடம் வவுனியா மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது.

### கடந்த மாதம் வவுனியா

வடபகுதி முகாமையாளரின் கீழ் இருந்த வவுனியா மக்கள் வங்கி மார்ச் மாதம் முதல் அனுராதபுரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

### கடன் வழங்கலுக்கு புதிய நிபந்தனை

இலங்கை வங்கி முன்னர் புனர்வாழ்வுக்கடன், சுய தொழிற்கடன், கைத்தொழிற்கடன், விவசாயக்கடன் போன்றவற்றை வழங்கிவந்தது.

ஆனால் தற்போது வடக்குக் கிழக்குப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டில் அல்லாத பகுதியில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு இக்கடன்களை வழங்கக் கூடாது என பணிக்கப்பட்டுள்ளது.

### 50 ஊழியர்கள் தெற்கு சென்றனர்

இலங்கை வங்கியைப் பொறுத்தமட்டில் யாழ் மாவட்டத்தில் முன்னரே ஊழியர் பற்றாக்குறை நிலவியது. ஆனால் அண்மைக் காலத்தில் மட்டும் சுமார் 50 ஊழியர்கள் இங்கிருந்து தெற்கிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். இவர்களில் 10 பேர் அதிகாரிகள் தரத்திலானவர்கள்.

### புதிய நியமனமும் இங்கு இல்லை

அதே வேளை யாழ் மாவட்டத்திற்குப் புதிய ஊழியர்கள் நியமனமும் வழங்கப்படவில்லை. இதனால் இங்குள்ள வங்கிகளில் ஊழியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

### வங்கியாளர் பரீட்சை 2 வருடமாக இல்லை

வங்கி ஊழியர்களுக்கான வங்கியாளர் பரீட்சை கடந்த 1990, 1991 ஆம் ஆண்டுகளில் யாழ் மாவட்டத்தில் நடாத்தப்படவில்லை.

# மாணவர் உணவு முத்திரைக்கு பாவனைக்கு உதவாத பொருள்கள் விநியோகம்

ஜனவரி மாதத்திற்கான உணவு முத்திரைகளுக்கு கூட்டுறவுக் கடைகள் மூலம் வழங்கப்பட்ட பொருள்கள் பாவனைக்கு உதவாத தரம் குறைந்தவையாக இருந்ததையிட்டு உதவி அரசாங்க அதிபருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் பெற்றோர்கள், தமது பிள்ளைகளுக்கு உணவு முத்திரைக்கு வழங்கிய பொருள்களை வித்தியாலய அதிபரிடம் நேரடியாக எடுத்துச் சென்று காண்பித்தனர்.

பழுதடைந்த உழுத்துப் போன கௌப்பி, அரிசி, பயறு போன்ற பாவனைக்கு உதவாத அப்பொருள்களை பார்வையிட்ட வித்தியாலய அதிபர் திரு. கே. நடராசா இது சம்மந்தமாக வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

# மாவீரர் தீரச்செயல்; நாடகங்கள் மூலம் வெளிப்படவேண்டும்

"மாவீரரின் வீர தீரச் செயல்களை நாடகங்கள் மூலம் மேடையேற்றி வெளிப்படுத்தி ஏற்றிப்போற்றவேண்டும்" என்று கலை, பண்பாட்டுக் கழகப்பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை முல்லைத்தீவு மாவட்டத்திற்கான முத்தமிழ் விழா ஏற்பாடு பற்றிய கலந்துரையாடலில் கூறினார்.

புதுக்குடியிருப்பில் நடைபெறவுள்ள இவ்விழாவையொட்டி 250 பக்கங்கள் கொண்ட மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. மாங்குளம் இராணுவ முகாமைத் தகர்த்தெறிந்த கப்டன் போர்க்கின் வீரச்செயல் மேடையில் பிரதிபலிக்க வேண்டும். ஆனையிறவு முகாம் தாக்குதலின் போது அரணுக்குள் ஊடுருவிச் சென்ற கரும்புலிகளின் வீரச்செயலும் மேடையேற்றப்பட வேண்டும் என்றும், அவர் மேலும் கூறினார்.

# புலிகள் இயக்கத் தடை பற்றிய அசோக் மித்ராவின் ஆய்வு

*1950 களில் நேபாளத்தில் ராணாக்களின் மன்னராட்சியை முடிவுக்கு கொண்டுவர நேபாள காங்கிரஸ் போராடியது. அப்பொழுது நேபாள காங்கிரஸ்காரரும் ஆதரவாளர்களும் இந்தியாவில் இருந்தனர். நேபாள காங்கிரஸ் தலைவர்களை நேரு தீவிரமாக ஆதரித்தார். இதனால் நேபாளத்தில் விரைவில் மன்னராட்சி மறையுமென நம்பினர் நேபாள காங்கிரசார் ஆனால் திடீரென நேரு நேபாளத்தின் மன்னர்களின் நண்பரானார். இந்தியாவிலிருந்த சகல நேபாள காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். மன்னராட்சியைக் காக்க இந்திய இராணுவம் நேபாள மன்னர்களுக்கு பாதுகாப்புக்கென விரைந்தது. எத்தனையோ நேபாளிகள் கொல்லப்பட்டனர். கொடுமையான சித்திரவதைகளையும் இந்திய இராணுவம் நடாத்தியது.

* 1983 ல் இலங்கையில் நடந்த இனக்கலவரத்தை அடுத்து ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டுக்கு அகதிகளாக வந்தனர். அப்பொழுது முதலமைச்சராக இருந்த எம். ஜி. ஆர் இதனால் மனவேதனையடைந்து எல்லா உதவிகளையும் செய்யும்படி இந்திராகாந்தி அம்மையாரை வற்புறுத்தினார். இந்தியாவின் ஆதரவோடும் அனுமதியோடும் இங்கே தங்கிக்கொண்டு போர்ப்பயிற்சியும் எடுத்துக் கொண்டிருந்தனர் போராளிகள்.

* ராஜீவ்காந்தி தாம் ஏற்படுத்தும் எத்தகைய ஒப்பந்தமாக இருந்தாலும்சரி அதை ஏற்றாக வேண்டுமென போராளிகளைக் கட்டாயப்படுத்தினார். அவசரமான முடிவினால் ராஜீவ்காந்தி இலங்கைக்கு அமைதிப்படையை அனுப்பி போராளிகளின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்யமுயன்றார். ராஜீவ்காந்தியின் நடவடிக்கைகள் போராளிகளுக்குச் சந்தேகத்தை உண்டாக்கின.

* இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை ஏற்க மறுத்த புலிகள் தி.மு. க. ஆட்சியுடன் நல்லுறவை ஏற்படுத்தியதை மத்திய அரசால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது. ஜெயலலிதா எதிரிக்கு நண்பன் எதிரி என்ற ரீதியில் விடுதலைப்புலிகளை எதிர்த்தார்.

* இந்திய- இலங்கை ஒப்பந்தம் தமிழர்களின் பிரச்சனைக்கு தீர்வாகாது என்ற ஈழத்தமிழரின் கண்ணோட்டத்தில் குற்றமேதுமில்லை. தங்கள் நலனுக்கு உகந்தது எது என்பதை முடிவு செய்யக்கூடிய உரிமை இந்திய அரசின் முடிவுகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கக்கூடாது என்று கூறுவதில் நியாயமுமில்லை.

* டில்லியின் ஆளும் அரசியல்வாதிகளோ, மடம் ஜெயலலிதாவோ விரும்பினாலும்சரி விரும்பாவிட்டாலும்சரி விடுதலைப்புலிகள் இயக்கம் ஈழத்தமிழர்களின் நம்பிக்கையையும் மதிப்பையையும் பெற்றுள்ளது. விடுதலப்புலிகளை ஒழிப்பதில் இலங்கை அரசு வெற்றி பெறமுடியாது.

* தமிழகத்தமிழர்களுக்கும்- ஈழத்தமிழர்களுக்கும் இடையில் உள்ள உறவு "தொப்புழ்கொடி" உறவு. புலிகளைத் தடைசெய்து விடுவதால் ஈழத்தமிழர் பிரச்சனைஎக்கேடாவது கெட்டுப் போகட்டும் எனத் தமிழக மக்கள் இருக்கமாட்டார்கள். இலங்கையில் மீண்டும் தாக்குதல் ஆரம்பமானால் தமிழகம் எரிமலையாக வெடிக்கும். - நன்றி "Front Line" -

# வவுனியா பாடசாலைகளில் இராணுவம் பெருமளவில் குவிப்பு

பாடசாலை லீவு காலத்தில் வவுனியா நகரில் அமைந்துள்ள தமிழ், முஸ்லீம் பாடசாலைகளில் சிறிலங்கா இராணுவத்தினர் முகாமிடத் தொடங்கியுள்ளனர்

பெருந்தொகையான இராணுவத்தினர் ஆயுத தளபாடங்களுடன் இப்பாடசாலைகளில் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

சமீபத்தில் துப்புரவு செய்யப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்படவிருந்த பட்டாணிச்சிபுளியங்குளம் பகுதியில் உள்ள முஸ்லீம் பாடசாலையில் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

வபகுதியில் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கு வசதியாக இந்த இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வருகின்றனர் என்று அறியப்படுகிறது

# "அந்நியனிடம் கையேந்தி நிற்கும் நிலையிலிருந்து மாற வேண்டும்"

"போராட்டத்தின் மூலம் தேச விடுதலையைப் பெறுவதோடு அந்நியனிடம் கையேந்தி நிற்கும் நிலையிலிருந்தும் நாம் மாற வேண்டும்" தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் விவசாயப் பயிற்சி வகுப்பிலும் கால்நடை வைத்தியப் பயிற்சி வகுப்பிலும் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கான ஒன்றிணைந்த கலந்துரையாடலில் சிறப்புரையாற்றும் போது தமிழீழ அரசியல் பொறுப்பாளர் தமிழ்மாறன் (மூர்த்தி) இவ்வாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடல் யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாயப் பீடத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் தமிழ்மாறன் அவர்கள் மேலும் உரையாற்றுகையில், பயிற்சியாளர்கள் பயிற்சியினை முடித்து விட்டு வெறுமனே இருந்து விடாது மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் பெற்றுக் கொண்ட பயிற்சியினைச் செயற்படுத்த வேண்டும். இம்மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தரிசாக விடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்ட அவர் தமிழீழ ஆய்வு நிறுவனம் செயற்படத் தொடங்கிய பின் பெரும் அபிவிருத்திக்குரிய பெரும் மாற்றங்களை அவதானிக்க முடிகிறது எனவும் தெரிவித்தார்.

தமிழீழ ஆய்வு நிறுவன வன்னி, கிளிநொச்சி பொறுப்பாளர்கள் வன்னி பிராந்தியத் தளபதி கெங்கா, வன்னி பிராந்திய அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மனோ ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது கலந்து கொண்ட பயிற்சியாளர்களுக்கு விவசாயம், கால்நடை வளர்ப்பு, பராமரிப்பு சம்மந்தமான விளக்கங்கள் துறைசார்ந்த நிபுணர்களினால் அளிக்கப்பட்டன.

## கிழக்கு அகதி முகாமில் மக்கள் பெருமளவில் கைது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம் பாறை பகுதிகளில் அகதி முகாம்களில் தங்கியிருந்த தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டு கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். பாரிய இராணுவ நடவடிக்கையின் போதே முகாம்களில் தங்கியிருந்த தமிழர்கள் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

## மாவீரனின் சகோதரியை பெற்றோரே முன்வந்து போராட அனுப்பினர்

மன்னாரில் லெப்டினன்ட் சைமன் என்ற மாவீரனின் சகோதரி கபிரியல் கரோலின் என்பவரை அவரது பெற்றோர் போராட்டத்தில் தாமாகவே முன் வந்து இணைத்துள்ளனர்.

அடம்பன் தாழைக்குளத்தைச் சேர்ந்த லெப். சைமனின் பெற்றோர் மன்னார் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளரிடம் இவரை ஒப்படைத்தனர்.

லெப். சைமன் இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டவராவர்.

## நூற்றுக்கும் மேற்பட்டோர் வவுனியாவில் கைது

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் அனுமதி அட்டையைப் பெறவில்லை எனக் கூறப்பட்டு சிறிலங்கா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த வாரம் மட்டும் 100 க்கும் அதிகமானோர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 30 வயதுக்குட்பட்ட எவரும் விடுதலை செய்யப்படவில்லை. விடுதலை செய்யப்படாதவர்களில் பெண்களும் அடங்குவர்.

தாண்டிக்குளத்தில் உள்ள இராணுவச் சோதனை சாவடியில் அனுமதி அட்டை பெறச் செ[illegible]வர்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுற்றறிக்கை மூலம் யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்கள் தீவுப்பகுதிக்கு பணிபுரிய அழைப்பு

படையினர் தற்போது தங்கியுள்ள ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் கடமை புரியயாழ் வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான தேசிய பொதுச்சுற்றறிக்கை இலக்கம் 3612 இன்படி இதற்கான கோரிக்கை சுகாதார சேவைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியர்கள், தாதிகள், மருத்துவமாது, பரிசாரர்கள், தொழிலாளர் ஆகிய சகல தரத்தினருக்கும் தீவுப்பகுதியில் வந்து கடமை புரிய அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் - ஜப்பான் மொழிகளுக்கிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக கண்டுபிடிப்பு

- 375 சொற்கள் ஒரே உச்சரிப்பையும் ஒத்த கருத்தையும் உடையனவாக உள்ளன •

ஜப்பானிய மொழிக்கும் தமிழ் மொழிக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் "கடல் கடந்த தமிழ்" எனும் விடயம் பற்றி உரையாற்றும் போது கூறினார். தமிழ் மொழியிலும் ஜப்பானிய மொழியிலும் உள்ள சுமார் 375 சொற்கள் ஒரே உச்சரிப்பையும் ஒத்த கருத்தையும் உடையதாக உள்ளன. இரு இலக்கியங்களிலும், இலக்கணத்திலும் நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றன. மேலும் தை 15 ஆம் திகதி தமிழர்கள் பொங்கல் விழாவை கொண்டாடுகின்றனர். இதே பொங்கல் விழாவை முன்னரும் ஜப்பானியர் தை 15 ஆம் திகதி பொங்கர எனும் பெயரில் சிவப்பு ரக அரிசியுடன் பொங்கி மகிழ்ந்ததாக அவர்களுடைய வரலாற்றுக் குறிப்பில் காணப்படுவதாகவும் அவர்எ[illegible]துக் கூறினார். இது போன்ற [illegible] எடுத்துக்காட்டுக்கள் மூலம் இ[illegible] விரு மொழிகளுக்குமிடையே இருந்த தொடர்புகளை அ[illegible] விளக்கினார். இத்தகை[illegible] தொடர்பு இருந்ததை ஜப்பானி[illegible] பேராசிரியர்களும் தற்போது ஆராய்ச்சிகள் மூலம் ஏற்று வருகிறார்கள் என்றும் இத்தொடர்பை மேலும் உறுதி செய்ய ஆராய்ச்சிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் எடுத்துக் கூறினார்.

## பாடசாலைகளில் பதுங்கு குழிகள்; இரண்டாம் உலகப் போரின் அனுபவங்கள்

மட்டக்களப்பு நகரத்திலிருந்த அனைத்துப் பாடசாலைகளிலும் பதுங்கு குழிகள் இருந்தன. மாணவர்கள் காதுகளில் பஞ்சுடனும் வாயில் பென்சில்களுடனும் விமானத் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பது எப்படி என்பது பற்றிய பயிற்சிகளில் அடிக்கடி ஈடுபடுத்தப்பட்டனர்.

விசேட சங்கொலி எழுப்பப்பட்டு விமானத் தாக்குதலின் எச்சரிக்கை விடுக்கப்படும் முறையே -பின்னர் காலை 6 மணிக்கும் மாலை 6 மணிக்கும் நேரத்தைக் குறிப்பிடுவதற்காக மட்டக்களப்பில் அறிமுகமாகியது.

இவ்வாறு தற்போது கொழும்பு வந்துள்ள இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பங்குகொண்ட முன்னாள் இராணுவத்தினர் கூறியுள்ளனர். பிரிட்டன், கனடா மற்றும் அவுஸ்ரேலியா போன்ற நாடுகளிலிருந்து கொழும்புக்கு முன்னாள் இராணுவத்தினர் சிலர் வந்துள்ளமை தெரிந்தமையே. இந்த வகையில் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் சுவடுகள் பல பதிந்த மட்டக்களப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

மட்டக்களப்பு நகரத்தின் முக்கிய பகுதியில் இன்றும் கூட சிவில் நிர்வாகத்தின் மையமாக டச்சுக் கோட்டை இருப்பதைக் காணலாம்.

உலகப் போரின் போது இக் கோட்டையின் மீது யப்பானிய விமானங்கள் தாக்குதல்களை நடத்தின. பல்வேறு பீரங்கிகளின் பகுதிகள் இக்கோட்டையைச் சுற்றி காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தமையால் இதனை ஒரு இராணுவத்தளம் என்ற பிழையான அனுமானிப்பிலேயே யப்பானிய விமானங்கள் இத்தாக்குதல்களை நடத்தின. வானத்தை நோக்கிய நிலையில் பொருத்தப்பட்டிருந்த பீரங்கள் அரும்பொருட்களாக காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன என்பதை எவர்தான் ஊகிக்கக் கூடும்.

ஆனால் இதன் ஆபத்தை உணர்ந்து கொண்ட அப்போதைய மட்டக்களப்பு அரசாங்க அதிபர் சில தொழிலாளர்களைக் கொண்டு இரவோடு இரவாக அதை அப்புறப்படுத்தினார். மட்டக்களப்பு கடற்கரைப் பகுதியில் பிரித்தானிய கடற்படைக்கு சொந்தமான எச். எம். எஸ். ஜேர்மஸ் என்ற விமானம் தாங்கிக் கப்பல், யப்பானியக் கப்பலிலிருந்த போர் விமானங்களின் குண்டு வீச்சுக்கு இலக்காகி கடலில் மூழ்கியது. உண்மையில் யப்பானின் இந்த விமானந்தாக்கிக் கப்பல் போர் துறைமுக தாக்குதலில் பங்குகொண்ட அட்மிரல் குமா என்பவரால் இலங்கை நோக்கி கொண்டு வரப்பட்டது.

சிட்னி றெனோல்ட் எனும் முன்னாள் பத்திரிகையாளர் ஒருவர் 1976 ம் ஆண்டில் லண்டல் டைம்ஸ் பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில் எச். எம்.- எஸ். ஜேர்மஸ் கடலில் மூழ்கிய தினத்தை குறிக்கும் வகையில் ஆண்டுதோறும் ஒரு விளம்பரம் பிரசுரிக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். இக்கப்பலிலிருந்து தப்பிய அதிகாரி ஒருவர் கப்பலின் கப்டன் மற்றும் சிப்பந்திகளை நினைவுகூர்ந்து ஒரு வாசகம் இவ்விளம்பரத்தில் இடம்பெற்றிருக்கும். எஸ். கே. ஏ. பிளாய்க் என்னும் இக்கப்பல் அதிகாரி மட்டக்களப்பு கரையை அடைந்து அங்கிருந்து கண்டி வைத்தியசாலையில் அவுஸ்திரேலிய டாக்டர்களால் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

1942 ஏப்பிரல் 9ஆம் திகதி காலை 10-55 மணிக்கு யப்பானிய விமானங்கள் எச். எம். எஸ். ஜேர்மஸ் என்ற இக்கப்பலை மட்டக்களப்பு கரையிலிருந்து சில மைல் தொலைவில் மூழ்கடித்தன.

ஜேர்மஸ், அதற்கு காவலாக இருந்த ஏனைய கப்பல்களும், அவுஸ்திரேலியாவின் எச். எம். ஏ. எல். வம்பயர் என்ற நாசகாரியும் பிரிட்டிஸ் சேர்ஜன் என்னும் டாங்கர், இதனுடன் கடலில் மூழ்கின. பிரித்தானிய கடற்படை மரபுக்கேற்ப ஜேர்மஸ் கப்பலின் கப்டன் ஒன்சுலோவும் கப்பலினுடையே கடலில் மூழ்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பிலிருந்து வரும் ரயில்வே பாதைகளை யப்பானிய விமானங்கள் குண்டு வீசி அழுக்க முயன்றமை மீண்டும் மட்டக்களப்பை முன்னணிக்கு கொண்டுவந்தது. ஆனால் இந்த முயற்சியில் யப்பானிய விமானங்கள் சித்தாண்டியில் இருந்த தென்னந்தோட்டங்களையே பெருமளவில் நாசமாக்கின.

### யாழ். போதனா

அப்படிப் பார்க்கும் போது ஒரு தடவை கப்பலில் கொண்டு வரப்படும் மருந்து சுமார் 48 பேருக்கு மட்டுமே ஏற்றுவதற்குப் போதுமானது.

## பொருளாதாரத் தடையை நீக்க அரசை வற்புறுத்துங்கள்.

■ 4 நாடுகளிடம் ஆயர்கள் கோரிக்கை.

சிறிலங்கா அரசு வட பகுதி மீது விதித்திருக்கும் பொருளாதாரத் தடையினால் அங்குள்ள மக்கள் கஸ்டங்களை அனுபவிக்கிறார்கள். அவர்கள் கஸ்டம் நீங்க வெளிநாட்டு அரசுகள் உதவ வேண்டும்; இல்லையேல் பொருளாதாரத்தடையை நீக்கும்படி சிறிலங்கா அரசை வற்புறுத்த வேண்டும்.

இவ்வாறான கோரிக்கை ஒன்றை நான்கு நாட்டுத் தூதுவர்களிடம் கத்தோலிக்க ஆயர் சபை விடுத்திருக்கிறது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய ஆயர்களே அமெரிக்கா, ஜேர்மனி, பிரிட்டன், கனடா ஆகிய நாட்டுத் தூதுவர்களை கொழும்பில் சந்தித்து இத்தகைய கோரிக்கை ஒன்றை விடுத்தனர்.

உணவு, மருந்து தட்டுப்பாட்டை நீக்கவும், போக்குவரத்து, தொலைத்தொடர்பு வசதிகளைச் சீர் செய்யவும் உதவும்படியும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## பலர் செவிடாகி உள்ளனராம்.

அம்பாறையில் இடம் பெற்ற குண்டு வெடிப்பையடுத்து நூற்றுக்கணக்கானோர் செவிடாகி இருப்பதாக தெரிய வருகிறது. அம்பாறை பஸ்நிலையத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு காரணமாக அச்சுற்றாடலில் வசிக்கும் பலருக்கும் காதுகள் செவிடாகி இருப்பதாகச் சொல்லப்படுகிது.

## கெலித் தாக்குதலில் காலிழந்த சிறுமிக்கு பிரான்ஸ் குழு உதவி

சிறிலங்கா பாதுகாப்புப் படையினரால் குடத்தனையில் நடாத்தப்பட்ட கெலிகொப்டர் தாக்குதல்களினால் இரு கால்களையும் இழந்த சிறுமியொருத்திக்கு பிரான்ஸ் சிறுவர் நலன்காக்கும் பிரிவு ஜெய்ப்பூர் கால்களைப் பொருத்தி சிறுமிக்கு விமோசனம் வழங்கியுள்ளது.

மந்திகை ஆதார வைத்தியசாலையில் இயங்கி வரும் பிரான்ஸ் வைத்திய சேவைக் குழுவின் இயக்குனராகக் கடமையாற்றி பிரான்ஸ் சென்றிருந்த டாக்டர் கிறிஸ்ரியனின் முயற்சிகளையடுத்தே இச்சிறுமிக்கு ஜெய்ப்பூர் கால்களைப் பொருத்தக்கூடிய வசதி ஏற்பட்டது.

கடந்த வருடம் யூன் மாதம் குடத்தனையிலுள்ள வீடொன்றில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களை நோக்கி கெலிகொப்டர் தாக்குதல்களை நடாத்திய போது சிறுமியான கார்மலர்க்கரசி, இவரது சகோதரன் அன்ரனி புஸ்பராஜ். இவரது தாயார் ஆகியோர் காயமடைந்தனர்.

# நுண்கலை அரும்பொருளகம் ஈழத்தமிழருக்கு மிக அவசியம்

அறுபதாண்டுகளுக்கு ஒரு முறை வரும் "ஆங்கீரச" வருடப் பிறப்பின் பொழுது "உதயன்" வெளியிடும் புத்தாண்டுச் சிறப் பிதழில் நமது பண்பாட்டுணர் வினைத் தொடர்ந்து பேணுவதற் கும், பண்பாட்டுத் தொடர்ச்சி யைப் பேணி (வருங்காலச் சந்த தியினருக்கு) கையளிப்பதற்கும் வேண்டிய ஒரு விடயம் பற்றி எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

முதலில், தமிழ் மக்களின் பண் பாட்டுப் பொதுமையும், பண்பாட்டு ணர்வும் பேணப்பட வேண்டிய தன் அவசியத்தையும் வற்புறுத் துவது அவசியமாகின்றது. அதன் அரசியல், சமூக, நிலப்பரிமாணங் களை நாம் நன்கு அறிவோம்.

இந்தத் தமிழ்ப் பண்பாடு என்பது யாரோ சில குறிப்பிட்ட தமிழர்க ளின் பிரத்தியேகமான சொத்து அல்ல. மேலும் சில வசதிப

மேற்குறிப்பிட்டவற்றுள் பண்பாட் டின் மிக முக்கிய குறியீடுகளாக விளங்குபவை "மொழி" யும் "கலை" யுமாகும்.

இந்தச் சிறு கட்டுரையின் தேவை கருதி, இங்கு 'கலை' பற்றியே நோக்கவுள்ளேன்.

சகல கலைகளையும் உள்ளடக் கும் வகையில், கலைகளுக்குக் கொடுக்கப்படும் வரைவிலக்க ணம் இதுதான்:-

"ஒரு மனநிலையையோ அன்றேல் விழுமியத்தையோ வெளிப்படுத் துவதற்கு, அன்றேல் 'தொடர்பு' நிலைப்படுத்துவதற்கு வேண்டிய திறனின் பயில்வு - கலை."

அடிப்படையிலே, சடங்குகளிலி ருந்து தோன்றி, முதலில் மதப்ப ரிமாணத்தினுள் நின்று, பின்னர் மதவட்டத்தினுள் மகிழ்வளிப்புப்



## பண்பாட்டு உணர்வும் தொடர்ச்சியும் பேணப்படுவதற்கு கருமமாற்றவேண்டும்

டைத்த உயர்மட்டத் தமிழர்களின் வாழ்க்கை முறையையே நாம் சகலரும் நமது பண்பாடு என்று போற்ற வேண்டுவதுமில்லை. அப் படிச் செய்வது ஜனநாயக மரபு களுக்கு விரோதமான ஒரு செய லாகும்.

பொருளாகி, அதன் பின்னர் மகிழ் வளிப்புப் பண்பாட்டையே பிர தானப்படுத்துவது கலை வளர்சி யின் பிரதான அம்சமாகும்.

இது (நாடகம், இசை, நடனம் போன்ற) ஆற்றுகைக் கலைகளுக்



முதலில் பண்பாட்டின் கூறு களைப் பார்ப்போம்.

(i) பண்பாடும் மொழியும்,
(ii) பண்பாடும் காரணங்களும் (சடங்குகள்),
(iii) காரணங்களும் கலைகளும்
(iv) பண்பாட்டமைவின் சூழல்
(V) பண்பாடும் மதமும்.

இவை சகலருக்கும் தத்தம் மட் டங்களிலே முக்கியமானவையே யாகும்.

குப் பெரிதும் பொருந்தும். குழைவு கலைகளும் பெரும்பாலும் இத் தகையனவே.

## கைவினைகள்

ஆனால் பண்பாடு எனும் பொழுது, நாம் செந்நெறி மயப்ப டுத்தப்பட்ட கலைகளை மாத்தி ரம் எடுத்துக் கொள்ளாமல், அந் தப் பண்பாட்டின் கைவினைக ளையும் எடுத்துக் கொள்ள வேண் டும்.

கைவினைகள் (Crafts) பண்பாட் டுத் தளம் கொண்டவை. அந்தக் கைவினைப் பொருள்களைக் கலையழகுடன் செய்யும் பொழு துதான், நாம் அந்தச் சமூகத்தின் அடிநலையான கலை உந்துதல் களை அவதானிக்கலாம்.

கைவினைப் பொருள்கள் செய்யப் படும் கலை நேர்த்தி மூலம், மக் களின் உணர்வு நலனையும் மனிதாயத உந்துதல்களையும் செம்மையையும் காணலாம் எனக் கமலாதேவி சட்டோபாத்தியாய கூறுவார்.


**பேராசிரியர் கா.சிவத்தம்பி**

**தலைவர், நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்**


கலை, கைவினைகளின் தொகு திக்குள் நாம் உற்று நோக்க வேண்டியவற்றின் பட்டியல் ஒன் றினைக் கலாயோகி ஆனந்தக்கு மாரசுவாமி தந்துள்ளார்.

அது பின்வருமாறு:-

* கலை, கைப்பணியில் ஈடு பட்டுள்ளவர்களின் பட்டியல்
* அணிகலன்கள்
* கலைச் சித்திரிப்பிலே இடம் பெறுபவை:- சூரியசந் திரர், அன்னம், பூ முதலி யவை
* கட்டடக்கலை:- வீட்டுக்கட் டடம். களஞ்சியங்கள், வழி பாட்டிடங்கள்
* மரவேலை- தூண், முகடு, கதவு, யன்னல், அடுக்களைப் பொருட்கள் (அகப்பை).
* கல்வேலை- சிற்பங்கள், கல் உபகரணங்கள், (அம்மி முதலியன).
* ஓவியக்கலை- வர்ணங்கள், சுவர் ஓவியங்கள்.
* தந்தம், கொம்பு, சங்கு ஆகியவற்றால் செய்யப்படு பவை.
* மெழுகுவேலை.
* மட்பாண்டங்கள்.
* ஆடை நெய்தல்- நெசவு
* பாய் இழைத்தல்.
* சாயம் போடல்.

இந்த அடிப்படையில் ஆனந்தக் குமாரசுவாமி இலங்கையிலே மேற்கொண்ட தேடலே "இடைக் காலச் சிங்களக் கலை" என்ற உலகப் பிரசித்தமான நூலாயிற்று.

உண்மையில் இவை எந்தப் பண் பாட்டுக்கும் பொதுவானவை. இந் தியப் பண்பாட்டு வட்டத்தினுள் சிறப்பாக வைத்து நோக்கும் பொழுது, இந்திய, இலங்கைப் பண்பாடுகள் துல்லியமாக விளங் கும்.

## ஈழத் தமிழர் கைப்பணிக் கலை

ஈழத்தமிழ் மக்களின் கைப்பணிக் கலைப் பாரம்பரியத்துக்கும் இது திறவு கோலாக அமையும்.

நமது சூழலில் கைப்பணிப் பாரம் பரியம் பற்றி நோக்கும் பொழுது "தற்காலிக கைப்பணிகள்" என்ற ஒரு தலையங்கத்தின் கீழ் -

அழகுப்பந்தல்கள் போடுதல், சாத்துப் படி முதலியவற்றையும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். தற்காலிக வடிவினவாகிய கோவிற்கலைகள் பல உள்ளன.

இவை யாவற்றையும் நோக்கும் பொழுது தான், நாம் நமது "கலை" பற்றிய கருத்தாடல்களில் இந்தப் பாரிய செல்வங்களைக் கருத் திலே கொள்வதில்லை என்பது புலனாகின்றது. இந்தக் கலைச் செல்வங்களைப் பேணாது நாம் கலை மரபைப் பேணி விட்டோம் என்று கூறவும் முடியாது என்ப தையும். உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதிலுள்ள சிக்கல் யாதெனில், இக்கைவினைப் பொருள்களின் தன்மை காலத்துக்குக் காலம் மாற்றம் பெறுபவை. எனவே இவற் றைப் பேணிப் பாதுகாக்க வேண் டியது எமது தலையாய கடமை யா கு ம்

அதுவும் இன்றைய சூழலில் வீடு கள் விமானக் குண்டுத் தாக்கு தல்களால் சேதப்படுத்தப்படு கின்ற பொழுது, எத்தனையோ கலைச் செல்வங்கள் மீட்கப்பட முடியாது அழிந்து போகின்றன.

நான் அறிய, வல்வெட்டித்துறை யின் அழிபாடுகளில், திரு. ஆனந் தராஜா (சாமி) என்பவர் வீட்டு வாயிற் கதவின் மேல் மரவேலை - யாழ்ப்பாணத்துக் கைப்பணிப் போட்டிகளில் முதற்பரிசில் பெற் றது. குண்டு வீச்சின் பின்னர் சிதைந்து போய்க் கிடந்தது.

பல்வேறு வகையான பாக்குவெட் டிகள், அரிமணைகள் ஆகியவற் றைப் பற்றியும் இவ்வேளை சிந் திக்கலாம்.

மேலும் நமது சமூகத்தின் அதி கார வரன்முறை காரணமாகப் பல பாரம்பரியக் கைவினைகள் கைவிடப்படுவது சமூக மாற்றத் தின் தவிர்க்க முடியாத தேவை யாகின்றது.

இத்தகைய ஒரு சூழலில், நமது மரப வழிப் பண்பாட்டுப் பாரம்ப ரியத்தைப் பேணுவதற்கும், அதே வேளையில் பண்பாட்டின் தொடர்ச்சியைக் காட்டவும், இவற்றை விஞ்ஞான ரீதியாகப் பேண வேண்டுவது அவசியமா கும். நமது கலைக்கைப்பணிப் பொருள்களின் அரும் பொருளகம் ஒன்று உருவாதல் வேண்டும்.

இன்றுள்ள சூழ்நிலையில் இது பல்கலைக்கழகத்திலே தொடங் கப்பெறுவது அவசியமாகும்.

## வற்றாப்பளை அம்மன்

தினால் 23 பேர் கொல்லப்பட்ட துடன் 30 பேர் படுகாயமடைந் தனர். இதில் இரண்டு கைக்கு ழந்தைகளும் அடங்கியுள்ளனர் எனச் செய்திகள் தெரிவிக்கின் றன. அத்துடன் இச்சம்பத்தில் இறந்தவர்களில் அநேகர் அளம் பில் குழாமுனை கிராமங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் செஞ் சிலுவைச் சங்க வாகனச் சார திகளுள் ஒருவரான சண்முகலிங் கமும் இதில் கொல்லப்பட்டுள் ளதாகவும் மேலும் அச் செய்தி கள் தெரிவிக்கின்றன.
இதற்கிடை முல்லைத்தீவு வற் றாப்பளை செல் அடி குறித்து இந்து மாமன்றம் கடும் கண்ட னம் ஒன்றை வெளியிட்டுள்ளது. "புனிதமான திருத்தலத்தில் இப் படியான அவலம் ஏற்படுத்துவ தும் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது வார்த்தைகளால் வர்ணிக்கப்படமுடியாத மனிதா பிமானமற்ற தாக்குதலை நடாத் துவதும் எந்த நாகரிகமான நாட் டிலும் நடக்கக்கூடிய செயல் அல்ல. இதை வன்மையாகக் கண்டிக்கிறோம்" என அச் செய் தியில் கூறுப்பட்டுள்ளது.

### 'பொய் வதந்தி'

இதற்கிடை முல்லைத்தீவில் விடுதலைப்புலிகளையே தாம் தாக்கியதாக பொய் வதந்தி ஒன்றை இராணுவக் கூட்டுத் தலைமையகம் கொழும்பில் பரப் பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தந்தையும் தனயர்களும்

சிறுகதை

செம்மலையின் ஜீவனாக, - அந்தக்கிராமத்தை சுற்றியோடும் கிரவல் அடித்த சிவப்பு வீதி, நெடுஞ்சாலையில் ஏறுகின்ற இடம். பூமணி மாமி, வளைவில்லாமல் - கரிய பாம்பு போல நீண்டிருக்கும் அந்த நெடுஞ்சாலையைக் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'ஆனையிறவில சண்டை நடக்கிறதாம்'
இன்று மட்டுமல்ல - அவள் இப்போது கொஞ்ச நாட்களாக இப்படித்தான். எங்கு சண்டை நடந்தாலும் கலவரம் தோய்ந்த விழிகளோடு ஏக்கத்தோடு இந்த இடத்தில் நிற்பாள்.

அவளுடன் யாரும் கதைக்கமாட்டார்கள். அவளுக்காக ஒரு அனுதாபப் பார்வையை மட்டும் வீசி விட்டு நகர்வார்கள்.

இரவுகள் பூமணி மாமிக்கு மிகக் கொடுமையானதாக இருக்கும். எதுவுமே விளங்காத வெறுமையான அமைதி இதயத்தை ஆக்கிரமித்திருக்கும். கிராமத்தை - மக்களை எல்லாம் அதிரவைக்கும் குண்டுச்சத்தங்கள் இவள் செவிகளுக்குள் செல்ல மறுத்து நிற்கும்.

விடிந்ததும் அந்தச் சந்திக்கு ஓடுவாள்.
'ஆனையிறவில சண்டை நடக்கிறதாம்.'

மெல்லிய பச்சை நிறத்தில் ஒரு வாகனம்; உள்ளுக்குள்ளும் பின்னுக்கும் சிலர் ஆயுதங்களுடன் நின்றனர். அந்த வீதியின் பள்ளம் திட்டிகளுக்கு ஏற்றமாதிரி, அழகாக வீதியைப்பிடித்துக் கொண்டு வந்த வாகனம் பூமணி மாமிக்கு அருகில் நின்றது.

'குணத்தான்ர அம்மா' என்றான் ஒருவன்.
அந்த வாகனத்தின் சாரதி ஆசனத்தில் இருந்தவன் இறங்கினான். அவனது இடுப்புடன், நட்சத்திரம் இடப்பட்ட கைத்துப்பாக்கி அழகாகப் பொருந்தி இருந்தது.

'அவ பேசமாட்டா' என்றான் அருகில் இருந்தவன். சாரதி ஆசனத்தில் இருந்தவனோ மிகப் பழக்கப்பட்டவன் மாதிரி கைகளை அசைத்து, மாமியுடன் இயல்பாகக் கதைத்தான்.

'ஏனம்மா நிக்கிறீங்கள்?'
'ஆனையிறவில சண்டை நடக்கிறது.....' பூமணி மாமி, தனது கையசைப்பு அவனுக்கு விளங்கி விட்டதா என ஏக்கத்தோடு பார்த்தாள்.
'உங்கட மகனுக்கு ஒரு பிரச்சனையும் இல்லையம்மா. அப்படி ஏதும் என்றாலும் நான் வீட்டை வந்து சொல்லுறன். நீங்கள் போங்கோ' என்றான் அவன்.

அவள் தவறு செய்தவள் போல் கூச்சத்துடன் கீழே பார்த்தாள். பின் ஒருவாறு நிமிர்ந்தாள். அவனின் கண்களில் கனிவும் - பாசமும் இருந்தன. பூமணி மாமி திரும்பி நடந்தாள். கொஞ்சத்தூரத்தின் பின் திரும்பிப் பார்த்தாள். அவன் நடந்து கொண்டிருந்தான். இடுப்பில் நட்சத்திரம் இடப்பட்ட கைத்துப்பாக்கி அழகாகப் பொருந்தி இருந்தது. குணத்தான் மாதிரி ஒருபக்கம் இழுத்தபடி......

* * * *

பூமணி மாமியின் இரண்டாவது மகன் குணம் இயக்கத்திற்குப் போனதற்குப் பிறகு, அவள் இப்படித்தான். இரவுகளில் அமைதி அற்று தூக்கமில்லாமல் இருந்தாள். வார்த்தைகளற்ற குரலால்..... குணத்தானுக்குத்தான்.... ஏதேதோ எல்லாம் பேசிக்கொண்டிருந்தாள்.

ஒரு நாள் - வானம் மப்புப்போட்டிருந்த காலை நேரம் குணத்தான் வந்தான். திண்ணையிலிருந்த சின்னையர் ஓடிப்போய் தன் மகனை மகிழ்ச்சியுடன் வரவேற்றுக்கொண்டிருந்தார். சிவப்பியும் வெள்ளையனும் அவனைக் கண்டதும் ஓடிப்போய் தங்கள் வாலையும் பின்பக்கத்து உடம்பையும் வளைத்து வளைத்து, அவனுடன் ஒட்டிக்கொண்டே வரவேற்றன.

'வெக்கம் ரோசமில்லாத பிறவிகள்.' - பூமணி மாமி கோபத்துடன் உள்ளே போய்விட்டாள்.

அவள் பெரிதாக விம்முவது கேட்டது.

குணத்தான் உள்ளே போனான், சின்னையர் வெளியே ஒதுங்கிக் கொண்டார். தாயும் மகனும் நீண்ட நேரமாக ஏதேதோவெல்லாம் பேசிக்கொண்டார்கள். ஒரு சின்னச்சிரிப்புடன் குணத்தான் வெளியே வந்தான். அவன் கைகளிலிருந்த 'சினைப்பர்' துப்பாக்கி இடையிடையே அழகாகவும் இயல்பாகவும் கைமாறிக் கொண்டது.

தகப்பன் மாதிரியே உயர்ந்து வளர்ந்து, அவரைப் போலவே கையில் ஒரு துப்பாக்கியுடன் முற்றத்தில் நடக்கும் மகனைப் பாக்க, பூமணி மாமிக்குப் பெருமையாக இருந்தது. மனதில் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

'அவன் சின்னனிலேயே சரியாத் தகப்பன் மாதிரி.'
குணத்தானுடன் தங்கச்சிகளும், தம்பிகளும், சின்னையரும், மாமியும் கூட அன்று இரவு முழுவதும் கதைத்தபடி இருந்தார்கள். விடிந்தவுடன் குணம் எழும்பிப் போய் விட்டான். கடைசித் தங்கை, அண்ணன் தன்னிடம் சொல்லாமல் போனதற்காக வீட்டில் எல்லோருடனும் சண்டை பிடித்தாள்; முகத்தை இரண்டு நாளாக உம் என்று வைத்திருந்தாள்.

ஊரில் கதை பரவியது.

'குணத்தான் சரியான திறமைசாலியாம் - குறிபார்த்து சுடுவதில் கெட்டிக்காரனாம்.'

சில நாட்கள் சென்றன. குணத்தானுக்கு அடுத்ததாக பிறந்த செல்வனும் இயக்கத்திற்கு சென்றுவிட்டான்.

'குணத்தானும் இயக்கத்தில தானே இருக்கிறான். மூத்தவனும் யாழ்ப்பாணத்தில இயக்க வேலைகள் செய்துகொண்டு இயக்கமாகத்தான் திரியிறான். நீ போய்க் கேட்டால் செல்வனை வீட்டை விடுவாங்கள்' என்று, சிலர் சொன்னார்கள். பூமணி மாமி அமைதியாக இருந்தாள். குணத்தான் சொல்லிவிட்டுப் போனது நினைவுக்கு வந்தது.

'இந்த மண்ணில நாங்கள் வாழ வேண்டும் என்றால் நாங்கள் தானேம்மா போராட வேண்டும்?'
அன்று தொடக்கம்தான் பூமணி மாமி இப்படி, எங்கு சண்டைநடந்தாலும் இந்தச் சந்திக்கு வந்து ஏக்கத்தோடு காவல் நிற்கத் தொடங்கினாள்.

நாட்கள் சென்றன. சின்னையர் இலக்கில்லாமல் எதையோ சிந்தித்தபடி அலைந்து திரிந்தார். சில நேரங்களில் நாய்களைக் கூட்டிக்கொண்டு களப்புக் கரைகளில் வேட்டைக்குப் போனார். மற்றும்படி நிலத்தையும் வானத்தையும் பார்த்துக் கொண்டு கடற்கரையில் நின்றார். இருந்தாற் போல் ஒரு நாள் சின்னையர் தோளில் ஒரு துப்பாக்கியைச் சுமந்து வந்தார். முகம் தெளிவாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

'நான் துணைப்படையில இருக்கிறன்' என்றார். பூமணி மாமிக்கு எதுவுமே புரியவில்லை. சின்னையரில் அவளுக்கு உயர்ந்த அன்பும் மதிப்பும் இருந்தது. அவர்



செய்வது எதுவென்றாலும் அது சரியாகத்தான் இருக்கும். இல்லையென்றால் சின்னவயதில் அவரின் சொந்தங்கள் எல்லாம் எதிர்த்தபோதும் அவர் பூமணியைக் கைப்பிடித்திருக்க மாட்டார்.

* * * *

சின்னையருக்கு அப்போது இளம் வயது. ஒரு தேக்கு மரம் மாதிரி உயர்ந்த உறுதியான தோற்றம். வேட்டை என்றால் அவருக்கு ஒரு கலை. குறிவைத்தால் இலக்குத் தவறாது. அவரின் தேகத்தில் கட்டை ஏறுவது மாதிரி - துப்பாக்கி இறங்குவதும் குறைவு.

பூமணி மாமியைப் பார்த்தவுடன் சின்னையர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்.
'அவள் வாய் பேசமாட்டாள் - காதும் கேளாது. இவளையோ கட்டப் போறாய்' என்று சொந்தங்கள் கிளர்ந்தன.

'அது பிரச்சனை இல்லை, வாழப் போறது நான்.' சின்னையர் உறுதியாகக் கூறிவிட்டு பூமணியைக் கூட்டிக்கொண்டு போய்விட்டார். அதன் பின்புதான் வெறும் பூமணியாய் இருந்த மாமி அந்தக் கிராமம் முழுவதும் பூமணி மாமி ஆகிவிட்டாள்.

அந்த மணற் காணிக்குள் இருக்கும் சின்னக்குடிசையில் தான் அவர்களின் குடும்ப வாழ்க்கை ஆரம்பித்தது.

அடுத்த வருடமே மூத்தவன் பிறந்தான். சின்னையர் முன்பக்கமாக ஒரு 'மால்' அமைத்துக் கொண்டார். குணமும், செல்வனும் பிறந்து அடுத்தடுத்து இரண்டு பெண்களும் பிறந்தவுடன் குடும்பம் பெரிதாகிவிட்டது. பெரிதாக வசதியில்லாவிட்டாலும், அவர்களின் வாழ்க்கை பட்டினியில்லாமல் தொடர்ந்தது.

வீடு முழுவதும் குழந்தைகள் தவழ்ந்த அந்த நேரங்களில் சின்னையர் ஊர் சுற்றுவதை பெரிதும் குறைத்துக்கொண்டார். தனது குஞ்சுகளுக்கும் தாய்க் குருவிக்கும் பாதுகாப்பளிப்பதற்காக, கூட்டைவிட்டு விலகாமல் கூட்டையே சுற்றிவரும் ஆண்குருவி போல, சின்னையர் வீட்டையே சுற்றி வந்தார்.

இரவு நேரங்களில் குழந்தைகளின் அழுகைக் குரல் பூமணிக்கு கேட்பதில்லை. சின்னையர் எழும்புவார்; மனைவியின் தூக்கத்தைக் கலைக்காமலேயே குழந்தைகளைத் தூங்க வைப்பார். சின்னையருக்கு கஸ்டம் தரக்கூடாது என்பதற்காக, அணையக் காத்திருக்கும் குமிழி விளக்கின் வெளிச்சத்தில் சில நேரங்களில் பூமணி விழித்திருப்பாள். அந்த நேரங்களில் தான் சின்னையர் எரிந்து விழுவார்.

'பேசாமல் படப்பா; நான் எழுப்பி விடுவன்தானே' என்பார், சினத்துடன்.
பூமணி மாமிக்கு உள்ளம் குளிரும். தன் கணவன் தன்னில் வைத்திருக்கும் பாசத்தை நினைத்து அவள் கண்ணில் கண்ணீர் கோலமிடும்.
குணத்தானில் மட்டும் பூமணி மாமிக்கு ஏதோ இனந்தெரியாத அந்த அன்பு - 'அவன் சரியாகத் தகப்பனை மாதிரி.'

* * * *

மணலாற்றில் சண்டை தொடங்கி விட்டது.
பூமணி மாமிக்கு இப்போது ஓய்வில்லை; ஒரே வேலை. அந்தச் சந்திக்குப் போகவும் கலவரத்துடன் காத்திருக்கவும் அவளுக்கு நேரமில்லாமல் போய்விட்டது.

சின்னையர் திண்ணையில் காவல் இருப்பார். காட்டுக்குச் சாப்பாடு கொண்டு போகவேண்டும். அவரது துப்பாக்கி அவரது கைகளில் இறங்காமல் எப்போதும் கிடக்கும். ஒரு நாள், பூமணி மாமியின் கடைசி மகள் விழுந்தடித்து ஓடி வந்தாள்.

'அம்மா, குணம் அண்ணை எங்கடை ஊருக்காலை காட்டுக்குப் போகிறார்' என்றாள்.

பூமணி மாமி சேலைத்தலைப்பை உதறியபடியே வெளியே வந்தாள்.
'உங்களை வரவேண்டாமாம். தான் போகேக்கை உங்களைப் பார்க்க வாறதாம்.' அவள் தயங்கியபடியே மெதுவாகச் சென்னாள். பூமணிமாமிக்குக் கோபம். விளங்காத வார்த்தைகளால் ஏதேதோவெல்லாம் ஏசினாள். சின்னையர் எழுந்து வாசலுக்கு வந்தார்.

'மகன், உடைஞ்சு கிடக்கிற பள்ளிக்கூடத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கிறான்' என்றுவிட்டு மண்டாடிக் கிழவர் சென்றார். சின்னையர் அந்த இடத்திற்குப் போகுமுன்பே, அவன் போய்விட்டான்.

பூமணி மாமிக்கு இப்போது ஒரே வேலை. அவள் ஒரு இடத்தில் நிற்காமல் சுழன்றுகொண்டிருந்தாள்.

சின்னையர் காத்திருப்பார், காட்டுக்குச் சாப்பாடு கொண்டு போக வேண்டும். இரவிலும் பகலிலும் மாமியின் அடுப்புப் புகைந்து கொண்டிருக்கும். இடையிடையே அவளின் நினைவுகள் பிள்ளைகளிடம் செல்லும்.

'மூன்றுபேரும் எங்கெங்கையோ எப்படியோ? அதுவும் குணத்தான் காட்டுக்கை போயிருக்கிறான்.' அவள் விழிகள் கலங்கும். நாட்கள் சென்று கொண்டிருந்தன. மணலாற்றில் சண்டை தொடர்ந்துகொண்டிருந்தது.

ஒரு பகற்பொழுதில், பூமணி மாமி அடுப்புடன் போராடிக் கொண்டிருந்த போது .....மாமி நெடுகவும் காத்திருக்கும் அந்தக் கரிய நெடுஞ்சாலையால் -- ஏழு எட்டு உடல்களைச் சுமந்துகொண்டு ஓர் அழுக்குப் பச்சை வாகனம், செம்மலையைக் கடந்து மெதுவாகப் போய்க்கொண்டிருந்தது.

அதில் பூமணி மாமியின் இரண்டாவது மகன் குணத்தானும்.......

* * * *

சின்னையரின் படலைக்குள் நான்கு ஐந்து இளைஞர்கள் நின்றனர். அவர்களின் கைகளில் ஆயுதங்கள் இருந்தன. சின்னையர் எழுந்து சென்றார். சின்ன மகளும் அவருக்குத் தெரியாமல் பின்னால் போனாள். சின்னையருக்கு அவர்கள் ஏதோ ரகசியமாக .....

சின்னவள் ஓடி வந்தாள்.

தொடர்ச்சி 11ம் பக்கம்

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்
கடலிலே காவியம் படைப்போம்
SEA TIGERS
OF LIBERATION TIGERS



# விடுதலைப்புலிகளின் கடற்புலிகள்

## தமிழீழக் கடல்

தமிழீழத்தைப் பொறுத்தளவில் இது மிக மிகப் பிரதானமானது. எங்கள் தாய்த் திருநாட்டில் நிலத்திற்கு நிகராக கடலும் இணைந்திருக்கிறது.

தமிழீழ நிலப் பகுதியை எங்கள் கடல் மூன்று பக்கங்களில் அரவணைத்தபடி உள்ளது.

பலர் நினைப்பதைப் போல எமது பாரம்பரிய வாழிடமான நிலப்பகுதி மட்டும் தான் தமிழத் தாயகம் அல்ல.

பெருமையும், பழமையும், செழுமையும் கொண்ட இந்தக் கடலும் நிலமும் இணைந்தது தான் எமது தமிழீழத் தாயகம் ஆகும்.

## இது எங்கள் கடல்

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எமது முன்னோர்களின் சமூக,- பொருளாதார வாழ்வோடு இது பின்னிப்பிணைந்து நிற்கின்றது.

எமது முன்னோர்களின் கட்டுமரங்களும், வாணிகக் கப்பல்களும், போர்ப் படகுகளும், இக்கடலன்னையின் மடியில் தான் தவழ்ந்து திரிந்தன.

தமிழீழக் கடல் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், வெளியுலக வர்த்தகத் தொடர்புகளுக்காகவும் முக்கியம் பெறுகிறது.

ஆனால் அதை விட முக்கியமாக தமிழீழத்தின் பாதுகாப்புக்கு இக் கடல் மிகமிகப் பிரதானமானது.

இக்கடல் எமது கட்டுப்பாட்டில் உள்ளவரை மட்டும் தான் அதனால் வரும் பொருளாதார நன்மைகளையும், அரசியல் நன்மைகளையும் எமது மக்கள் அனுபவிக்க முடியும்.

ஆகவே எமது கடல் எமது தேசத்தின் பாதுகாப்போடு பின்னிப்பிணைந்து கிடக்கின்றது.

ஆசியாவிலேயே மிகச் சிறந்த இயற்கைத் துறைமுகமான திருகோணமலையைக் கொண்டிருப்பது, எமது கடலின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். இது தவிர கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பல துறைமுகங்களையும், பொருளாதார மையங்களையும் எமது கடல் கொண்டிருக்கின்றது.

தமிழீழத் தாயக மீட்பிற்கான ஆயுதப்போராட்டம் கருக் கொண்டு ஆரம்பமாகிய முன்னைய காலத்திலும் சரி, அது முனைப்புற்று வளர்த்துச் செல்லப் படும் நிகழ்காலத்திலும் சரி, விடுதலைக்குப் பின் நிறுவப்படப் போகின்ற தனி அரசு ஆட்சியில் நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம். அரசியல் ஆகிய விடயங்களைத் தீர்மானிக்கும் எதிர் காலத்திலும் சரி, எமது கடல் மிகப்பிரதான பங்கு வகித்தது. வகிக்கப்போகின்றது.



கடற்புலிகளின்
சிறப்புத் தளபதி சூசை

இப்படியாகப் பல பரிமாணங்களிலும் முக்கியத்துவம் பெற்ற- பல சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள- எங்கள் கடலை நாம் சிறீலங்காவின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டுமெனில், தமிழீழக் கடற்பரப்பில் நாம் எதிரியைவிட பலம் பொருந்தியவர்களாக மிளிர வேண்டும். இந்த யதார்த்த உண்மையை அன்றே புரிந்து கொண்ட எமது தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள், பல வருடங்களுக்கு முன்னரேயே அதற்கு வேண்டிய திட்டங்களைத் தயாரித்து, படிப்படியாக அதற்கு நடைமுறை உருவமும் கொடுத்துள்ளார்.

சிங்களப் பேரினவாத அரசிடம் இருந்து எமது தாயகத்தை மீட்டெடுப்பதற்கான போராட்டம் என்னும் போது, தமிழீழத் தாயகத்தின் தரை எல்லைகளையும் கடல் எல்லைகளையும் விடுவிப்பது என்பதையே, அது குறித்து நிற்கின்றது.

எனவே, தமிழீழத் தாயகத்தின் ஒரு பகுதியாகிய தரையில் பிரமாண்டமான வளர்ச்சியுடன் இருக்கும் எமது தரைப் படையைப் போன்று, தமிழீழம் தனக்கென்று ஒரு கடற்படையையும் கட்டியெழுப்ப வேண்டியது அவசியம்.

எமது மக்களின் சுதந்திர எழுச்சியை உற்று நோக்குவோமானால் அது புரட்சிகர ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்தபின் எந்த அளவுக்குக் கடலோடு பின்னிப் பிணைந்து இருக்கின்றது. என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

தமிழீழம் தரைத் தொடரில் தனது எல்லையாக சிறீலங்காவை மட்டுமே கொண்டிருக்கின்றது. ஏனைய திசைகளில் கடலிலேயே எமது எல்லைகள் இருக்கின்றன. எமது ஆயுதப் போராட்டம் கடந்து வந்த ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும்,தமிழீழக் கடல் மிகப் பெரிய பாத்திரத்தை வகித்துள்ளது.

இச் சூழ்நிலையிலேயே 1984ஆம் ஆண்டு தலைவர் பிரபாகரன் அவர்கள்,விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கடற்புலிகள் படைப் பிரிவுக்கு அதன் வரலாற்றுரீதியான பிறப்பைக் கொடுத்து,ஆரம்பத்தில் அதற்கு 'கடற்புலிகள்' எனப் பெயரும் சூட்டினார்.

ஆரம்பத்தில் கடற்புலி அணியினருக்கு கடல் சம்பந்தமான அறிவு ஊட்டப்பட்டதுடன்,கடற் சண்டைகளுக்குத் தேவையான பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

ஆனாலும் கடற்புலி அணியினர் எதிரியிடம் வலிந்து சென்று கடற் சண்டைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்தார்கள்.

விடுதலைப் போராட்டத்தில் அந்தந்தக் காலங்களோடு ஒட்டிய தேவைகளை நிறைவு செய்யும் பல பணிகளை, அவர்கள் ஆற்ற வேண்டியிருந்தது. கடற் பயணங்கள் போவதற்கும் அவற்றிற்குப் பாதுகாப்பு அளிப்பதற்குமான வேலைகளையே ஆரம்பத்தில் கடற்புலி அணியினர் செய்து வந்தனர்.

எனினும் சிறீலங்கா கடற்படையினரின் போர்ப் படகுகள் மீது, ஆங்காங்கே ஒரு சில கடற்கண்ணித் தாக்குதல்களையும் நிகழ்த்தியுள்ளனர்.

1984 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டதிலிருந்து 6 வருடங்களாகப் பெரிய அளவிலான கடற் சண்டைகள் எதிலுமே ஈடுபடாதிருந்த கடற்புலி அணியினர், 1990 ஆம் ஆண்டு திரும்பவும் சிறீலங்கா இராணுவத்துடன் போர் ஆரம்பமாகிய போது, கடற் சண்டைகளில் ஈடுபடத் தொடங்கினர்.

இக் கடற் போரிலும் கரும்புலித் தாக்குதல் வடிவம் புகுத்தப்பட்டு, கடற் போர் ஓர் புதிய பரிமாணத்திற்குள் சென்றது.

இந்த வகையில் சிறீலங்கா கடற்படை மீதான தனது முதலாவது பாரிய தாக்குதலை, 10.07.1990 அன்று வல்வைக் கடலில் வைத்துக் கடற் கரும்புலிகள் மேற்கொண்டனர்.

வெடி மருந்து நிரப்பிய படகொன்றுடன் சென்ற கடற்புலிகளான மேஜர் காந்தருபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோர் சிறீலங்கா கடற்படையின் ஒரு போர்க் கப்பலைச் சேதமாக்கி, இந்த வீர சாதனையைப் படைத்தார்கள்.

இதே போன்று 04.05.1991 அன்றும், வல்வைக் கடலில் வைத்துக் கட்டளைக் கப்பலொன்று கடற்புலிகளால் தகர்க்கப்பட்டது. இது



கடற்புலிகளின்
தளபதி கங்கை அமரன்

வும் ஒரு கரும்புலி நடவடிக்கை என்பது குறிப்பிடத்தக்கது. இதில் கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன். ஆகியோர் வீரச் சாவினை அணைத்துக் கொண்டார்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் சுதந்திரமாக உலா வந்த சிங்களக் கடற்படையினருக்கு இவ்விரண்டு கரும்புலி நடவடிக்கைகளும் பீதியைக் கொடுத்திருந்தன. அத்துடன் தமிழீழக் கடற்பரப்பில் சிங்களப் கடற்படை வைத்திருந்த கடல் ஏகபோகம் உடைந்து சிதறியது.

தமிழ் மக்களாகிய நாம் ஒரு யதார்த்தத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழீழ விடுதலைக்கான போராட்டம் நிலங்களை விடுவிக்கும் அளவிற்கு முன்னேறிய போது, சிறிலங்கா அரசானது கடல் மூலமே தனது படைப்பலத்தை பிரயோகித்து, எமது முன்னேற்றத்தைத் தடுக்க முயன்று வருவதை நாம் கண்டு வருகின்றோம். அதாவது தரையுத்தத்தை வெல்ல எதிரி கடலையே பயன் படுத்தி வருகின்றான்.

1987 ஆம் ஆண்டு வடமராட்சியைக் கைப்பற்ற ' ஒப்பரேசன் லிபரேசன் ' என்ற இராணு நடவடிக்கையைச் சிங்களப் படைகள் நடாத்திய போதும், 1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு முகாமை நாம் வெற்றிகொள்ள முயன்ற சமயத்திலும், 1991 ஆம் ஆண்டு சிலாவத்துறை முகாமை நாம் கைப்பற்ற முயன்ற சமயத்திலும், 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுச் சமரின் போது எம்மிடம் வீழ்ச்சியடையும் நிலையில் இருந்த ஆனையிறவுத் தளத்தைப் பாதுகாக்கும் போதும், சிறிலங்கா அரசு கடல் வழி மூலமே தனது பலத்தைப் பிரயோகித்து, எமது முயற்சிகளுக்குக் குறுக்கே நின்றது.

இதற்குப் பிரதான காரணம் எமது கடலில் எதிரி வைத்திருந்த கடல் ஏகபோகம்தான்.

தலைவர் பிரபாகரன் அவர்கள் அடிக்கடி கூறுவார்: புவியியல் ரீதியாகத் தமிழீழத்தின் பாதுகாப்பு கடலோடு ஒன்றிப் போயுள்ளது. எனவே, கடற்பரப்பிலும் நாம் பலம் பொருந்தியவர்களாகி, எமது கடலில் எதிரி வைத்திருக்கும் கடல் ஆதிக்கத்தைத் தகர்த்து, எமது கடலில் நாம் பலம் பெறும் போதுதான், விடுவிக்கப்படும் நிலப்பகுதியை நிரந்தரமாக நிலைநிறுத்திக் கொள்வதுடன், தமிழீழத்தின் நிலப் பகுதிகளில் இருக்கும் எதிரிப் படையையும் விரட்டியடிக்க முடியும் என்று.

ஒரு கடற்படையை கட்டி எழுப்ப வேண்டுமாயின், ஏராளமான பொருட் செலவை சந்திக்க நாம் தயாராக இருக்க வேண்டும். தரைச் சண்டைகளுக்கு பயன்படுத்தப்படும் ஆயுதங்கள், உபகரணங்களின் பெறுமதியைவிடக் கடற் சண்டைகளுக்கு பயன்படுத்தப்படும் ஆயுத உபகரணங்களின் பெறுமதி மிகமிக அதிகமாகும்.

தொடர்ச்சி 11ம் பக்கம்

சுசி மாமா என்றால், வவுனியா மாவட்டத்தில் அறியாதவர்கள் எவருமே இல்லை. அந்த மண்ணில் வாழ்கின்ற ஒவ்வொருவருக்குமே அவன் மாமா தான். அவர்கள் அனைவருமே அவனை விரும்பினார்கள். அந்த மண்ணின் இளைய வாரிசுகள் தான், சுசியாக இருந்தவனை சுசி மாமாவாக மாற்றிவிட்டார்கள்.

பாவற்குளம் தான் சுசி மாமா பிறந்து வளர்ந்த கிராமம். தமிழீழத்தின் எல்லைகளைத் தன் இருகைகளையும் நீட்டி வரையறுத்துக் கொண்டிருக்கும் பாவற்குளத்தையும், அதன் முன்பாக அதையே நம்பியிருக்கும் கிராமத்தையும், வயல் வெளிகளையும், அந்த மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் தன்னைவிட அதிகமாக நேசித்தான்; சுசியும் அவர்களைப் போலத்தான். அந்த மண்ணுடன் தன்னை இறுகப் பிணைத்திருந்தான்.

பாவற்குளத்தைச் சுற்றி சிங்களக் குடியேற்றக் கிராமங்கள் புதிதுபுதிதாக எழுந்து கொண்டிருந்தன. சிங்கள அரசு இயந்திரம் கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டித் தமிழர் நிலங்களில் சிங்களவர்களைக் குடியமர்த்திக் கொண்டிருந்தது.

சிங்களவர்களின் ஆக்கிரமிப்பும், இராணுவ அடக்கு முறையும் அந்தப் பகுதி எங்கும் தலைவிரித்தாடின. சுசியும் டேவிட்டும் இப்போது இளைஞர்களாக இருந்தார்கள். அதற்குள்தான் அந்த எல்லையோரப் பகுதியில் எவ்வளவு மாற்றங்கள் நிகழ்ந்திருந்தன. பாவற்குளத்தில் சிங்களப் பாடசாலை ஒன்று இருந்தது. சிங்கள அரசின் நிர்வாக அதிகாரிகள் இருந்தனர். பாவற்குளத்தின் நீர்ப் பங்கில் பெருமளவு, சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. எது எப்படியோ, அந்த எல்லையோரத் தமிழ்க் கிராமங்களில் அமைதி அழிக்கப்பட்டிருந்தது.

# மேஜர் டேவிட்

**(கார்த்திகேசு செல்வக்குமார்)**

**இராசேந்திரன்குளம்**
**- வவுனியா**

**பிறப்பு: 30.05.1964**
**வீரமரணம்: 19.09.1991**




பாவற்குளத்திற்கு அருகில் அதனை ஒட்டிக்கொண்டே இராசேந்திரங்குளம் எனும் கிராமம் உள்ளது. டேவிட் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவன்.சிறுவயதிலேயே டேவிட்டும் சுசியும் நண்பர்களாகி விட்டார்கள். பள்ளிக்கூட வகுப்பறை ஒன்றில் முதன் முதலாக ஒருவரையொருவர் கண்டு கொண்டார்கள். மிக விரைவிலேயே அவர்கள் நண்பர்களாகிவிட்டார்கள். அந்த வயதிலேயே ஓர் புரிந்துணர்வு, உண்மையான அன்பை - பாசத்தைத் தங்கள் நெஞ்சங்களில் அவர்கள் வளர்த்துக் கொண்டார்கள். ஒருவனை ஒரு நாளேனும் காணாவிடில் மற்றவன் சோர்ந்து விடுவான்; கலங்கி விடுவான்.

அவர்கள் வாழ்ந்த கிராமங்களின் எல்லையிடப்படாத வயல்வெளிகளும், வாய்க்கால்களில் பாய்ந்தோடும் குளத்துத் தண்ணீரும், காட்டின் கரைகளும் அந்த நண்பர்களின் அன்பை மேலும் வளர்ந்தன; உரமூட்டி உறுதி சேர்ந்தன. அவர்கள் இருவரும் ஒருவரில் ஒருவர் மிகவும் அன்பு வைத்திருந்தனர். அதைப் போலத்தான் அந்த மண்ணில், அந்த வயல் வெளிகளில், காட்டுத் தரைகளில், ஏன் எல்லாவற்றிலுமே அவர்கள் மிகவும் பற்று வைத்திருந்தனர்.

எல்லைப்புறத் தமிழ்க் கிராமங்கள் அனைத்திலும் நடந்தமாதிரியே பாவற்குளத்திலும் நடந்தது. முதலில் சில சிங்களவர்கள் வயற்கரையோரங்களில், காட்டுக் கரைகளில் குடி வந்தனர். பின்பு அகலக் கால்களை வைக்கத் தொடங்கினர். காடு ஒரு பக்கமாக அழிக்கப்படத் தொடங்கியது. மறுபக்கமாகத் தமிழர் கிராமங்கள் அபகரிக்கப்படத் தொடங்கின. குடியேற்றத்தின் மூலம் சிங்களச் சனத்தொகை அதிகரிக்கத் தொடங்கியது.

காலப்போக்கில் சிங்களக் காடையர்களின் அடாவடித்தனங்கள் அதிகரித்தன. தமிழர்களுடனான சில கலகங்கள் வந்தன, தமிழர்கள் கடுமையாக எதிர்த்த பொழுதெல்லாம் சிங்களக் காடையர்களுக்குத் துணையாக சிறிலங்காவின் காவற்துறையும் வந்தது. வலுவற்றவர்களின் எதிர்ப்பு கொடிய ஆயுதங்களுக்கு முன் என்ன செய்ய முடியும்?




'எங்கள் மண் மீட்கப்பட வேண்டும்' - இந்த நினைவே அங்குR வாழ்ந்த அனைவரின் நெஞ்சிலும் பற்றிக் கொண்டது. சுசி மாமா தான் முதலில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்டான். இரகசியமாக இயங்கிய அந்த நேரத்து இயக்க நடைமுறையின் படி, அவன் டேவிட்டுக்குச் சொல்லாமல் - அவனுக்குத் தெரியப்படுத்தாமலேயே - சென்றுவிட்டான்.

டேவிட் தனித்துப் போனான். அவனுக்கு எல்லாமே வெறுமையாக இருந்தது. அவர்கள் சேர்ந்து திரிந்த வயல் வெளிகள், கிராமத்து வீதிகள், வாய்க்கால் தண்ணீர் எல்லாமே அவனுக்கு வெறுமையாகத் தெரிந்தன. ஆனால் அதுவே அவனில் ஒரு புதிய சிந்தனையோட்டத்தை வளர்த்தது.

'எங்கட கிராமம் மீட்கப்பட வேண்டும்'

அது ஒரு தனி மனிதனின் உணர்வு தான். ஆனால் அது ஒட்டுமொத்த சமூகத்தின் நலனாக இருந்தது. தாயகத்தின் நலனாகவும் இருந்தது. சில நாட்களின் பின்பு டேவிட்டும் போராட்டத்தில் கலந்து கொண்டான்.

அந்த நேரங்களில் தான் .. .. .

பாவற்குளம், இராசேந்திரங்குளம் உட்பட அதன் அயற் கிராமங்கள் அனைத்திலிருந்தும், தமிழர்கள் ஆயுத முனையில் அடித்து விரட்டப்பட்டனர். எதை எடுப்பது?; எதை விட்டுச் செல்வது? தங்கள் இதயங்களை, நினைவுகளை விட்டுவிட்டு வெறும் மனிதக் கூடுகள் இடம் பெயர்ந்தன.

சுசி மாமாவின் தந்தை நாட்டுப் பற்று நிறைந்த மனிதர்; அந்த மனிதரும், அவரைப் போல இன்னும் சிலரும் தங்கள் வாழ்விடத்தை விட்டு விலக விருப்பமின்றி அந்த மண்ணிலேயே தொடர்ந்து நின்றார்கள். ஆனால், ஓர் இரவில் சுற்றி வளைத்த சிங்களத் துப்பாக்கிகள் அந்த மனிதர்களை இரக்கமற்றுக் கொன்றன. சிங்களவர்களின் நில ஆக்கிரமிப்புக்குத் தடையாக நின்ற அந்த மனிதர்கள், அரச படைகளால் அழிக்கப்பட்டனர்.

காலங்கள் சென்றன. வவுனியா மாவட்டத்தில் வெடியோசை எங்கு கேட்டாலும் அங்கு மாமா நிற்பான்; அருகிலேயே டேவிட்டும் நிற்பான். எல்லாச் சண்டைக் களங்களிலுமே இருவரின் துப்பாக்கிகளும் இலக்குத் தவறாமல் எதிரிகளை விழுத்தின. அவர்கள் சில நேரங்களில் ஆட்கள் அற்றுப் போன தங்கள் கிராமங்களிலும் அலைந்தனர். ஆனால் இப்போது, அவர்களின் கைகளில் ஆயுதங்கள் இருந்தன; துணைக்குத் தோழர்கள் இருந்தனர்.

சுசி மாமா அனைத்துத் தோழர்களின் மனதிலும் மிக விரைவிலேயே இடம் பிடித்துக் கொண்டான். 'சுசி மாமா நிக்கிறான்' அந்த நினைவே அவன் தோழர்களுக்கு ஓர் ஆன்ம பலத்தைக் கொடுத்தது. சண்டைக் களங்களில் அசையாத உறுதியுடன் நின்று கொண்டு, மிக இலகுவான செயல் ஒன்றைச் செய்பவன் போன்று வழி நடத்தும் அவனைப் பார்க்க, வியப்பாக இருக்கும். ஒரு முறை, சண்டைக்கு அவர்கள் தயாராகி விட்டார்கள்; இன்னும் சில மணி நேரங்களில் குருமண் காட்டில் இராணுவக் காவலரண் ஒன்று இல்லாமற்போகும் - இந்த மண்ணின் விடிவிற்குப் போராடத் தேவையான ஆயுதங்கள் எங்கள் கைகளில் தவழும். ஆனால் அந்த நேரத்தில், 'சுசி மாமாவின் அம்மா இறந்துவிட்டாள்' என்ற செய்தி கிடைக்கிறது.

ஒருபுறம் தன்னை இந்த மண்ணிற்குத் தந்து அன்பையும், பாசத்தையும் கொட்டி வளர்த்த அம்மா அவனுக்காக எரியாமற் காத்துக் கிடந்தாள்.

மறுபுறம், இந்த மண்ணின் வாழ்விற்குத் தேவையான ஆயுதங்கள்....

டேவிட்டுக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. அசைவற்றுப்போய் ஒரு மரத்துடன் இருந்துவிட்டான். சுசி மாமாவோ ஒரு முடிவுக்கு வந்திருந்தான். அன்று குருமண் காட்டில் இராணுவக்காவலரண் ஒன்று சிதறியது. ஆயுதங்கள் புலிகளின் கைகளில்.... அதன் பின்பே, மாமா தன் தாயின் உடலைப் பார்க்கப் போனான். ஒரு புலிவீரன் தாயைவிட தாய் நிலத்தை அதிகமாக நேசிக்கிறான் என்பதற்கு, மாமா ஒரு விளக்கமாக நின்றான்.

....... அன்று,
சுசி மாமாவும் டேவிட்டும் வேறு

வேறு இடங்களில் நின்றனர், காலை நேரம்.

"இண்டைக்கு எங்கட ஊருக்குப் போறன்" என்று, டேவிட்டுக்கு மாமா 'வோக்கி . டோக்கி'யில் அறிவித்தான். அவர்கள் நெடுகவும் போய்வந்து, எதிரிகளைச் சந்தித்துச் சண்டையிட்ட இடங்கள் தான். ஆனால் டேவிட் அதைப்பற்றிப் பெரிதாக எண்ணவில்லை.

"சரி போயிட்டு வா. வந்து விசயங்களைச் சொல்லு" என்றான்.

மாமாவும் அவனது தோழர்களும் பாவற்குளம் கிராமத்திற்குள் கால் வைத்தார்கள். அந்த மண்ணில் மிதித்ததுமே அவன் புதுவேகம் வந்தது போல, உற்சாகமாய் இருந்தான். சிறு வயது தொடக்கம் அவன் பழகிய மரங்களும், மேடுகளும், பள்ளங்களும் அவனுக்கு இப்போது வழி சொல்லின. அவர்கள் நடந்தார்கள். தமிழர்களின் குடியிருப்புக்கள் அழிந்து போய், புதர் மண்டிப்போய்க் கிடந்தன. தூரத்தில் - தமிழர் நிலங்களில் நின்ற சிங்களவர்களின் கல் வீடுகளும், பாடசாலைகளும் தெளிவாகத் தெரிந்தன.

ஒரு மண் மேட்டின் மேல் மாமா நின்றான். முன்னால் மாமரம் ஒன்று சிதைந்து போன நிலையிலும், இன்னமும் உயிர்ப்புடன் நின்றது.

"இது தான் என்ர வீடு இந்த வீட்டுக்குள்தான் நான் சின்னவனாகத் தவழ்ந்ததும், பெரியவனாக வளர்ந்ததும்."

சுசி மாமாவின் வார்த்தைகள் அவனது கிராமத்தின் காற்றில் கலக்கும் முன்னமே, பற்றைகள் எங்கும் பதுங்கியிருந்த இராணுவ வெறியர்களின் துப்பாக்கிகள் இயங்கத் தொடங்கின.



அவர்கள் நிலை எடுப்பதற்கு முன்பே மாமாவிற்குச் சூடு விழுந்தது. அவன் பிறந்து வளர்ந்த வீட்டின் மடியிலேயே, அவனது தந்தை மாதிரியே அவனும் உயிரற்று விழுந்தான். அடுத்தது குமாருக்கு.... எஞ்சி நின்ற தோழர்களின் துப்பாக்கிகள் எதிரிகளை நோக்கி இயங்கின. அவர்கள் ஐந்து பேர் தான் நின்றார்கள். எதிரிகளிலோ பலர் இருந்தனர். ஆனாலும் மாமாவையும் குமாரையும் தூக்கிக் கொண்டே மற்றைய தோழர்கள் பின்வாங்கி வந்தார்கள்.

சண்டைக்குச் சென்ற தோழர்கள் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் தோள்களில் இருவர்.... முகாமில் இருந்த அனைத்துத் தோழர்களும் எழுந்து ஓடினார்கள். நெஞ்சத்தில் இனந்தெரியாத தவிப்பு.... யார்....? டேவிட்டும் ஓடினான்.

சுசி மாமாவின் உடல்.... அவனால் தாங்கமுடியவில்லை; நம்பவும் முடியவில்லை. அழுதான்; இயன்றவரை அழுதான். வளர்ந்தவன் தான்; நீண்ட போராட்ட வாழ்வில் அடிக்கடி இழப்புக்களைச் சந்தித்தவன்தான். ஆனாலும் கண்ணீர் அவனுக்குக் கட்டுப்பட மறுத்தது. டேவிட் மட்டுமல்ல எல்லாத் தோழர்களுமே, ஏன் அந்த மண்ணே அன்று கண்ணீரால் நனைந்து போனது.

சுசி மாமாவின் பிரிவைத் தாங்க முடியாமல் டேவிட் தவித்தான். அவனுக்கு கிராமத்திற்குப் போக வேண்டும் போல் இருந்தது. அவர்கள் இருவரும் சேர்ந்து திரிந்த வயல் வெளிகள், முன் பொரு காலத்தில் தண்ணீர் புரண்டு பாய்ந்த வாய்க்கால்கள், தற்போது இராணுவ முகாமாய் மாறியிருக்கும் பாடசலை எல்லாவற்றையும் பார்க்க வேண்டும் போலவும் இருந்தது.

'சுசி மாமாவின் இழப்பைத் தாங்கிக்கொள்ள வேண்டும் என்றால், எங்காவது இராணுவத்தினருக்கு நல்லதொரு அடி கொடுக்கவேண்டும்.'

அவன் முடிவெடுத்துக் கொண்டான். நீண்ட காலமாகத் தான் பாதுகாத்து வைத்திருந்த சுசி மாமாவின் படத்தைத், தன் தோழன் ஒருவனிடம் கொடுத்தான். அந்தப் படம் எப்பவோ நீண்ட நாட்களுக்கு முன்பு எடுத்தது. ஆனாலும் சுசி மாமா அதில் தெளிவாக இருந்தான்.

"இந்தப் படத்தைப் பெரிசாக்கி சுசிக்குச் சுவரொட்டி அடியுங்கோ."

அவன் சொல்லிவிட்டு ஏதோ சிந்தனையில் சிறிது நேரம் இருந்தான்.

"ஆனா.... இதைப் பார்க்கிறதிற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்குமோ தெரியவில்லை."

அவன் சிரிக்க முயன்று தோற்றுப் போய்த் திரும்பி நடந்தான்.

டேவிட் தன் தோழர்களுடன் சண்டைக்குப் புறப்பட்டான். சிப்பிக்குளம் - சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட இன்னொரு தமிழ்க் கிராமம். சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக

# மேஜர் சசி (மாமா)

**(ப. சிதம்பரநாதன்)**

**பாவற்குளம் 1ம் யூனிட்**
**- வவுனியா**

**பிறப்பு : 18-04-1964**


**வீரச்சாவு : 28-08-1991**

மீண்டும் ஓர் சண்டை - இப்போது டேவிட்டின் தலைமையில் நடந்தது.

அந்தச் சண்டையின் பின்பு - தோழர்கள் முகாமிற்குத் திரும்பிக் கொண்டு இருந்தார்கள். அவர்களின் கைகளில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் இருந்தன.

ஆனால், அவர்களில் ஒருவன் டேவிட்டின் உடலையும் சுமந்து வந்தான்.

- ஜெயம் -



# போரும் அதற்கவசிய நிறுவன கட்டமைப்புகளும்

சமூகத் தன்மை பெற்ற அனைத்து தொடர் செயற்பாடுகளும் (சமூக நிகழ்ச்சிப்போக்கு) தத்தமக்கென தனித்துவமான நிறுவன கட்டமைப்புக்களை கொண்டதாகவே உள்ளது இவ் விதமான கட்டமைப்பு ஒன்று தவிர்க்க முடியாததாகும். அது இல்லையானால் அந்நிகழ்ச்சிப் போக்கு நடைபெறமாட்டாது. ஒரு சமூக நிகழ்ச்சிப் போக்கை நடத்த விரும்புகிறவன், ஒரு சமூக நிகழ்ச்சிப் போக்கு நடைபெறுதல் அவசியம் என கருதுபவன், அச் சமூக நிகழ்ச்சிப் போக்கை நடத்திமுடிக்க அவசியமான நிறுவன கட்டமைப்பை உருகாக்கவும் அதைப் போதிக்கவும் முன்வரடண்டும்.

கல்வி என்பதும் சமூக தன்மை பெற்ற ஒரு தொடர் செயற்பாடாகும். இந்த சமூக நிகழ்ச்சிப் போக்கிற்கு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், கல்வித் திணைக்களம், பாடசாலைகள் போன்ற நிறுவன கட்டுமானங்கள் அத்தியாவசியமானவையாகும். இவற்றை நிறைவேற்று அங்கங்களாகக் கொண்டால், கொள்கை வகுப்பு திட்டமிடல் என்ற அங்கமும் அவசியமாகின்றது. இது போன்றே அனைத்து நிகழ்ச்சிப் போக்குகளுக்கும் கொள்கை வகுப்பு திட்டமிடல் அங்கங்கள், நிறைவேற்று அங்கங்கள், என இருவகை நிறுவன கட்டமைப்புகள் இருக்கும். போர் என்ற சமூக நிகழ்ச்சிப் போக்கும் இதற்கு விதிவிலக்கானதல்ல.

வர்க்க, இன முரண்பாடுகள் நிலவும் சமூக அமைப்பில் அனைத்துச் சமூக நிகழ்ச்சிப் போக்குகளும் ஒரு குறிப்பிட்ட அரசியல் அபிலாசைகளைக் கொண்டதாகவே இருக்கும். ஒரு குறிப்பிட்ட அரசியல் தலைமைக்கு கீழ்ப்பட்டதாகவே இருக்கும். சிறிலங்காவின் கல்வி செயற்பாட்டைப் பொறுத்தவரை கல்வி அமைச்சே அந்த அரசியல் தலைமையாகும்.

போரிற்கு அவசியமானது போர்த்திறன் கொண்ட, போர்ப்பயிற்சி கொண்ட அணியும், அப்போரை அன்றைய அரசியல் தேவையுடன் சரியான முறையில் பொருத்திச் செல்லக்கூடிய அரசியல் தலைமையுமாகும்.

போர்ப்பயிற்சி, போர்த்திறன் என்னும் போது அது விரிந்த பரிமாணங் கொண்டது. களப்பயிற்சி மாத்திரமல்ல, படையணியை நடத்தும் திறன், படையணிக்கு அவசியமான கருவிகள், வைத்திய வசதிகள், பண்பாட்டு வளர்ச்சிகள், அரசியல் அறிவு வளர்ச்சிகள், தொழில் நுட்ப தேவைகளைப் பூர்த்தி செய்தல், எதிரியின் நடமாட்டங்களை அறிவதற்கான ஒற்றர் சேவைகள் ஆகிய இத்தியாதி திறன்களைப் பெற்றவர்களின் ஒன்றிணைப்பே போரிற்கு அவசியமான நிறுவன கட்டமைப்பாகும். இதையே இன்று படை அல்லது சேனை என்று பொதுப்பட அழைக்கிறோம்.

வெவ்வேறு சமூக நிகழ்ச்சிப் போக்குகளைப் பூர்த்தி செய்வதற்கு என்று அமைக்கப்படும் வெவ்வேறு நிறுவன கட்டுமானங்களுக்கும் அது அதற்கென்று தனித்துவமான குணவியல்புகளும் திறன்களும் உண்டு. இவ்வித தனித்துவ குணவியல்புகளும், திறன்களும் அத்தியாவசியமானதாயும் உள்ளன.

ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் தனித்துவமான குணவியல்புகள் உண்டு. நிர்வாக சேவையில் இருப்பவனுக்கு என்று சில தனியான குணவியல்புகள் உண்டு. அதே போலவே சேனையில் உள்ளவர்களுக்கு என்றும் சில தனியான குணவியல்புகள் உண்டு. போர் என்ற செயற்பாட்டில் எதிரியை அழித்தொழிப்பதில் மன ஊசலாட்டம் இன்மையே அந்த மனோநிலையாகும். ஒரு ஆசிரியன் தனது மாணவர்களைப் பொறுத்தவரை எவ்வளவிற்கு முடியுமோ அவ்வளவிற்கு பிரம்பைப் பயன்படுத்துவதையும், கடுமையான (கண்டிப்பான அல்ல) சொற்களைப் பயன்படுத்துவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் ஒரு போர் வீரன் தனது எதிரியை அழிப்பதற்கும், நிராயுதபாணியாக்குவதற்கும் எவ்வளவிற்கு முடியுமோ அவ்வளவிற்கு நவீன ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் கடுமையான முறையில் நடந்துகொள்வதும் அவசியமானது. எதிரியை அழிப்பது என்பது ஒரு பழிவாங்கும் நடவடிக்கையல்ல. எதிரியின் போர்த்திறனை அழிப்பதுடன் தொடர்பு பட்டதாகும். தனது போர்த்திறனை இழந்த எதிரியை குரோத உணர்வு எதுவுமின்றி, ஜீவகாருணியத்துடன் நடத்த வேண்டியது. அவசியம். இதுவும் ஒரு போர்வீரனுக்கு அவசியமான ஒரு பண்பாகும்.

ஒரு பாடசாலையில் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் - வகுப்பாசிரியருக்கும் - மாணவர்களுக்கும், அதிபருக்கும் - மாணவர்களுக்கும், இடையே உள்ள உறவு எவ்வளவிற்கு முடியுமோ அவ்வளவிற்கு ஜனநாயகத்தன்மை பெற்றதாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தாம் செய்யப்போகும் ஒவ்வொரு காரியத்தையும் ஏன் எதற்காக என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதைப் புரிந்து கொள்ளாமல் அவர்களால் அதை சரியாகச் செய்யமுடியாது. ஆனால், படையினுள் அல்லது சேனையினுள் நிலைமை வேறு விதமானது. இங்கு ஆணைக்கு கீழ்ப்படி என்ற கோட்பாடே கடைப்பிடிக்கப்படுகிறது. நீண்ட தயாரிப்புகள், படை நகரல்கள், ஆயுத கையிருப்புகள், ஆள் அணி வளங்கள், சமருக்கான வியூகங்கள் போன்ற இன்னோரன்ன விடயங்களை பல்வேறு காரணங்களால் படையின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் வெளிப்படுத்த முடியாத நிலையுள்ளன. அதுவும் குறிப்பாக கொரில்லா போர் நடவடிக்கையில் இது மிகச் சாதாரணமானது. இனால் படையினுள் முன் சொன்னவகையான ஜனநாயகத்துக்கு பதில் ஒரு வகை இரும்புக் கட்டுப்பாடே நிலவுகிறது. பாடசாலையில் அமைக்கப்படும் சாரணர் அமைப்பினுள் நிலவும் ஜனநாயகமும், வகுப்பறையில் நிலவும் ஜனநாயகமும் ஒன்றுதானா? சாரணர் அமைப்பினுள் இறுக்கமானதொரு கட்டுப்பாடு நிலவுவது தெரிந்ததல்லவா?

பயன்படுத்தும் ஆயுதங்கள், சமரின் போதான வியூக அமைப்பு முறைகள், போர் பயிற்சிகள், இராணுவ ஒழுங்கு விதிகள், இராணுவ உசார் நிலையை தொடர்ந்து பேணி வைத்திருப்பதற்கான ஒழுங்குகள் ஆகியன தொடர்பாக, அதாவது இராணுவ திறனுடன் தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பாக ஆக்கிரமிப்பு இராணுவமும் விடுதலை இராணுவமும் குணம் வேறுபாடுகள் கொண்டவையல்ல. பலம் பலவீனம், போதும் போதாமை, நுட்பமானது சாதாரணமானது போன்ற அளவியல் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் குணவியல் வேறுபாடுகள் இருக்காது.

அதே நேரத்தில், இராணுவ உள் அமைப்பை பொறுத்தவரையிலும், சேனையின் அறவொழுக்கத்தைப் பொறுத்தவரையிலும் ஆக்கிரமிப்பு இராணுவமும் விடுதலை இராணுவமும் குணாம்ச வேறுபாடுகள் கொண்டவை. ஆக்கிமிப்பு இராணுவத்துள் உயர் அதிகாரிகள் அதிகார மமதை கொண்டவர்களாகவே இருப்பார்கள். இவர்களுக்கும் சாதாரண சிப்பாய்களுக்கும் இடையில் ஒரு நல்லுறவு இருப்பதில்லை. இது தான் ஆக்கிரமிப்பு இராணுவத்தை உள்ளிருந்து அரிக்கும் புற்றுநோயாகும். மாறாக, விடுதலை இராணுவத்துள் அதிகாரிகளுக்கும் சாதாரண போர் வீரர்களுக்கும் இடையே ஒரு நல்லுறவு லவும். ஒருவர் நலனில் மற்றவர் பரஸ்பர அக்கறை கொண்டவர்களாக இருப்பார்கள். இது முதவது குணாம்சவேறுபாடாகும்.

இரண்டாவது குணாம்ச வேறுபாடு, சேனையின் அறவொழுக்கம் சம்பந்தப்பட்டதாகும். விடுதலை இராணுவம் தேசநேசம், மக்கள் நேசம், ஈக(தியாக) உணர்வு, தனிநபர் நலனை போராட்டத்திற்கு அர்ப்பணிக்கும் மனப்பான்மை ஆகிய அறவொழுக்கங்களைக் கொண்டதாக இருக்கும். ஆக்கிரமிப்பு இராணுவமோ ஆக்கிரமிப்பு உணர்வும் தனிநபர் லாபமீட்டும் நோக்கும், தனிநபர் நலனை முதன்மைப்படுத்தும் தன்மையும் கொண்டதாகவே இருக்கும் சிலவேளைகளில் ஆக்கிரமிப்பு உணர்வு தேச வெறியாக மாற்றப்பட்டு ஓர்வகை தேசப்பற்றை உருவாக்கக்கூடும். ஆனால், நீண்ட காலநோக்கில் தனிநபர் லாபமீட்டும் நோக்கு இந்த தேசவெறித் தேசப்பற்றைக் கூட கொன்றுவிடுகிறது.



ஆக்கிரமிப்பு இராணுவம் ஆகக் குறைந்தது ஒரு மரபுவழித் தன்மை பெற்ற கிரமமான சேனையாகவே இருக்கும் (Conventional Regular Army). (அணுவாயுதக் கருவிகள் பாவனைக்கு வந்ததன் பின்னர், இப் போர்க் கருவிகளே நவீன கருவிகளாக கருதப்பட்டன. ஏனைய ஆயுத போர்க் கருவிகள் மரபுவழிக் கருவிகளாக கருதப்பட்டன. மரபுவழிக் கருவிகளைத் தாங்கிய படையே மரபுவழிப் படை எனப்படும்.) வல்லரசுகளின் ஆக்கிரமிப்பு இராணுவம் அணுவாயுத படைப்பிரிவையும் தனது அங்கமாகக் கொண்டிருக்கும்.

சிறிலங்காவின் ஆக்கிரமிப்பு இராணுவம் ஆரம்பத்தில் ஒரு பலவீனமான, மிக எளிய முறையில் ஒருங்கமைக்கப்பட்ட ஒரு மரபுவழித் தன்மை பெற்ற கிரமமான சேனையாகவே இருந்தது. போராட்டத்தின் ஊடாக இன்று அது நவீனத் தன்மைகள் பெற்ற ஒரு மரபுவழித் தன்மைபெற்ற கிரமமான சேனையாக வளர்ந்து வருகின்றது.

விடுதலை இராணுவத்தைப் பொறுத்தவரை அது சிதறுண்ட, மிகப் பலவீனமான முறையில் மத்தியத்துவப்படுத்தப்பட்ட கொரில்லாக் கூறுகளாகவே தோற்றம் பெறுகிறது. பின்னர் போராட்டத்தினூடே அது மத்தியத்துவப் படுத்தப்பட்ட ஒரு கொரில்லா சேனையாக படிமுறை வளர்ச்சி பெறுகிறது. அதற்கு அடுத்தபடியாக மரபுவழி போர்முறையைப் பின்பற்றும் கிரமமான சேனையையும் கொரில்லா சேனையையும் கொண்ட ஒரு கூட்டுத் தொகுப்பாக அது பரிணாம வளர்ச்சியடைகிறது. இதுதான் விடுதலை இராணுவத்தின் வளர்ச்சி விதியாகும். தனது இறுதி வெற்றிவரை இவ்வளர்ச்சி தொடரும்.

## தமிழ்த்தேசிய

கள் இந்தியாவின் விரோத சக்தியாக செயற்படவில்லை. அத்துடன் இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டை குலைக்க எண்ணவும் இல்லை.

### தமிழ் நாட்டு மக்களுக்கு முதல் விலங்கு

அயல் நாட்டில் இயங்கும் தமிழ்த் தேசிய எழுச்சி இயக்கமான விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்வதன் மூலம் தமிழ் நாட்டில் உருவாகி வரும் தமிழ்த் தேசிய உணர்வலைகளுக்கு அணைகட்டி விடலாமென டில்லி ஆளும் வர்க்கம் கருதுகின்றது.

எனவே புலிகள் மீதான இத்தடையானது தமிழ் நாட்டு தமிழ் மக்களின் இனவுணர்வுக்கும் தேசிய விழிப்புணர்ச்சிக்கும் இடைப்பட்ட விரோத விலங்கெனக் கருத வேண்டும். இந்த விலங்குகளை உடைத்தெறிய வேண்டிய பொறுப்பு தமிழக மக்களைச் சார்ந்துள்ளது.

### துரோகத்தின் தொடர்ச்சியே

தனது குறுகிய தேசிய நலனிலும் உடனடி சுய அரசியல் லாபத்திலும்அக்கறை கொண்டு இந்தியா எடுத்துள்ள இந்த நடவடிக்கை குறித்து நாம் ஆச்சரியப் படவில்லை. தமிழீழ மக்களின் நேர்மையான தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு இந்திய அரசு தொடர்ச்சியாக இழைத்து வரும் துரோக நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவே இதை நாம் கருதுகிறோம்.

### நேச சக்தியை அந்நியப்படுத்தியுள்ளது

இந்த நடவடிக்கையின்மூலம் தெற்காசியாவில் இருந்து தனது நேச சக்தியான தமிழீழ தேசிய இனத்தை இந்தியா அந்நியப்படுத்திவிட்டது.

இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். தூரநோக்கற்ற இராஜதந்திரமற்ற விவேகமற்ற அவசர நடிவடிக்கையானது எதிர்காலத்தில் இந்திய பூகோள அரசியல் நலன்களுக்குத் தான் பாதகமாக அமையும்."

## தமிழர் தாயகமா?

தைக் கொண்ட சிங்களத் தீவிரவாத அமைப்பு வடக்கை அநுராதபுரத்துடன் இணைக்க வேண்டுமென்ற பௌத்த சிங்கள பேரினவாதக் கோஸத்தை வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர். இக்கோரிக்கைக்கு ஆதரவாக சிங்களப் பேராசிரியர் பலர் எழுதியும் பேசியும் வருவது சிங்கள பௌத்த பேரினவாதம் எவ்வாறு சிங்கள மக்களின் சகல மட்டத்திலும் வெறூன்றியுள்ளது என்பதை தெளிவுபடுத்துகின்றது.

### சமாதானப் பேச்சு வார்த்தையா? பிக்குமார் கேலி

மேலும் இலங்கை அமரபுர பீடத்தின் தலைவரான மடிகே பஞ்சசீக மகா தேரோ, கோட்டை நாக விகாரை அதிபதி, மாதுளுவாவே சோபித்த தேரோ, பெல்லன்வில ராஜ மகா விகாரையின் தலைவர் பேராசிரியர் பெல்லன்வில விமலரத்தின தேரோ போன்றோர் "புலிகளுடன் பேசத்தேவையில்லை. இலங்கை அரசும் புலிகளைத் தடை செய்ய வேண்டும்" எனப் பச்சை வகுப்பு வாதத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

# யாழ். போதனா வைத்தியசாலை எதிர்நோக்கும் இடைஞ்சல்கள்

## ■ நோயாளர் தொகையோ நாளாந்தம் அதிகரிக்கிறது; சேவைக்குத் தேவையான டாக்டர்களோ மிகக்குறைவு! ■

**யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இவ்வேளையில் அங்கு பணிபுரியும் வைத்தியர்களின் தொகை வேகமாக குறைந்து வருவதாக மருத்துவ வட்டாரங்களின் மூலம் தெரியவருகிறது.**

மேற்படி வைத்தியசாலையின் தற்போதைய நிலவரம் குறித்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக அங்கு பணிபுரியும்பொறுப்பு வாய்ந்த வைத்திய அதிகாரிஒருவரை அணுகி பேசியபோதுபெறப்பட்ட தகவல்கள் இங்கு தொகுத்து தரப்படுகின்றன.

### தினமும் 1200 பேர் வருகை

தற்போது யாழ் போதனா வைத்திய சாலையின் வெளிநோயாளர் பகுதிக்கு வரும் நோயாளர்களின் தொகை நாளொன்றுக்கு 1200 பேராக அதிகரித்துள்ளது. இவர்களில் 200 பேர் மட்டில் தினசரி வாட்டுக்களது மேலதிகச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகிறார்கள்.

### டாக்டர்களின் தொகை குறைகிறது

நிலைமை இப்படியிருக்க, வைத்தியசாலையில் சேவைபுரியும் டாக்டர்களின் தொகையோ நாளுக்கு நாள் குறைவடைந்து செல்கின்றது.

### 3 மாதங்களில் 29 பேர் சென்றனர்

கடந்த ஜனவரிக்குப் பின் மட்டும் யாழ். போதனா வைத்திய சாலையிலிருந்து 18 டாக்டர்கள் தெற்குக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார்கள். அதுதவிர மேலும் 11 டாக்டர்கள் இந்த வாரத்துடன் தென்பகுதிக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளனர்.

### ஒருவர் மட்டுமே இங்கு வந்தார்

இத்தனைக்கும் பிறமாவட்டங்களிலிருந்து கடந்த ஜனவரிக்குப் பின்னர் ஒரேயொரு டாக்டர் மட்டுமே யாழ். போதனா வைத்திய சாலைக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார்.

### இன்ரேண்ஸிப் இங்கு.....

சமீபத்தில் 23 பயிற்சி டாக்டர்கள் யாழ். போதனா வைத்திய சாலைக்கு நியமிக்கப்பட்டனர். அவர்கள் யாழ். மருத்துவ பீடத்திலிருந்து 'இன்ரேண்ஸிப் 'எனப்படும் உள்ளகப் பயிற்சிக்காகவே இங்கு அனுப்பப்பட்டனர். அவர்களின் சேவை தற்காலிகமானதே.

### பயிற்சியின் பின் பிறபகுதிகளுக்கு

அவ்வாறு உள்ளக பயிற்சிக்கென நியமிக்கப்படுவோரும் தமது ஒரு வருடப் பயிற்சியை முடித்ததும் பிற பகுதிகளுக்கு மாற்றப்பட்டு விடுவார்கள்.

### தாதிகளுக்கும் பற்றாக்குறை

தாதிகளைப் பொறுத்தவரையில் தென்பகுதிக்கு இட மாற்றம் பெற்றோர் தொகை குறைவே. தற்பொழுது போதனா வைத்திய சாலைக்கு 400 தாதிகள் சேவைக்கு தேவைப்படுகிறார்கள். ஆனால் இங்கு இப்பொழுது சேவையில் உள்ளவர்கள் 200 பேர் மட்டுமே.

### தொழில்நுட்ப ஊழியர் நிலை

எம். எல். ரி. எனப்படும் ஆய்வுகூட ஆய்வாளர்கள் உட்பட தொழில்நுட்ப ஊழியர்களுக்கும் இங்கு பற்றாக்குறை உள்ளது.

### தற்காலிக சமாளிப்பு

ஓய்வு பெற்றுச் சென்ற இத்தகைய ஊழியர்கள் பலரை மீண்டும் சேவைக்கு அழைத்துள்ளதனால் இப்பிரச்சனையை தற்காலிகமாக சமாளிக்கக் கூடியதாக உள்ளது. தற்போது சேவையாற்றுபவர்களில் அரைவாசிப்பங்கினர் இந்த வகையில் மீள் சேவைக்காக அழைக்கப்பட்டோரே.

### தளபாடத் தேவையும் அதிகம்

கட்டில்களும் மற்றும் தளபாடங்களும் அதிகரித்து வரும் தேவைக்கோ அல்லது ஒரு போதனா வைத்தியசாலையின் தகுதிக்கோ ஏற்றதாக இங்கு இல்லை.

### எக்ஸ்றே கருவி ஒன்று மட்டுமே

தற்போது ஒரேயொரு 'எக்ஸ்றே' கதிர்பட கருவியை மட்டுமே பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. மற்றொரு கருவியும் இயங்கக்கூடிய நிலையில் தற்போது உள்ளபோதும் அதனை இயக்குவதற்குத் தேவையான உயர் அழுத்த மின்சக்தியை இப்போது எம்மிடமுள்ள ஜெனரேட்டர்கள் மூலம் பெறமுடியாமல் உள்ளதனால் அதனைப் பயன்படுத்த முடியாமல் உள்ளது.

### மட்டுப்படுத்தப்பட்ட சேவை

இதனால் ஒரு நாளைக்கு சமார் 50 பேருக்கு மட்டுமே எக்ஸ்றே படம் பிடிக்க முடிகிறது. இதனைக் கருத்தில் கொண்டு சேவையைப் பொறுத்து ஒரு வார்டில் ஒரு நாளைக்கு மூன்று பேருக்கு மட்டுமே எக்ஸ்றே படம் பிடிப்பதென மட்டுப்படுத்திச் செயற்பட வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

### 2 ஜெனரேட்டர்கள் சேவையில்

ஜெனரேட்டர்களைப் பொறுத்த வரையில் தற்பொழுது ஒரு பெரியது உட்படஇரு ஜெனரேட்டர்கள் மட்டுமே இயங்கக் கூடிய நிலையில் உள்ளன. மற்றைய மூன்றும் பழுதடைந்த நிலையில் திருத்த வேலைகளுக்காக கொழும்பு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

### சவச்சாலை நிலை இது

மின்சாரம் இன்மையால் சவச்சாலையிலுள்ள குளிருட்டிகளை இயக்க முடியாமல் உள்ளது. அந்த குளிருட்டிகளுக்கு உயர் அழுத்த மின்சாரத்தை வழங்கக் கூடிய ஜெனரேட்டர் வசதியும் இல்லை. இதனால் ஒரு குறிப்பிட்ட தினங்களுக்கு மேல் சடலங்களைப் பாதுகாத்து வைக்கக் கூடிய வசதி தற்பொழுது யாழ் போதனா வைத்தியசாலையில் இல்லை.

### மூன்று உண்டு; ஆனால்

வைத்தியசாலையின் தேவைகளுக்காக தற்பொழுது மூன்று அம்புலன்ஸ் வண்டிகள் இருக்கின்ற போதிலும் அவற்றில் ஒன்று மட்டுமே பாவிக்கப்படுகிறது.
மற்றைய இரண்டில் ஒன்று பெற்றோலில் மட்டுமே இயங்கக் கூடியதாகையால் அதனை தற்போது பயன்படுத்த முடியாத நிலை, மூன்றாவது விபத்தில் சிக்கியதனால் திருத்தப்படவேண்டிய நிலையில் உள்ளது.



### புதிய அம்புலன்ஸ் கிடைக்கும்

இது குறித்து எடுத்துக் கூறப்பட்டதால் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் புதிய அம்புலன்ஸ் வண்டியொன்றை யாழ். போதனா வைத்தியசாலைக்கு வழங்க இணங்கியுள்ளது.
அவ்வாறே கிளிநொச்சி வைத்தியசாலைக்கும் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் அம்புலன்ஸ் வண்டியொன்றை வழங்க இணங்கியுள்ளது.

### டாக்டர்கள் விடுதி பலத்த சேதம்

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் வைத்தியசாலையில் டாக்டர்கள் தங்கும் விடுதி முற்றாகச் சேதமடைந்துள்ளது.

### சீமெந்து வழங்க அனுமதி மறுப்பு

இதனைத் திருத்துவதற்கு கொழும்பில் அனுமதி கேட்டபோது, திருத்த வேலைகளுக்கென சீமெந்து வழங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் திருத்த வேலைகள் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளன.

### மாதாந்தம் பெரும் செலவு

இதன் காரணமாக சேவையிலுள்ள சுமார் 40 டாக்டர்களுக்கு விடுதி வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக வைத்திய சாலை நிர்வாகச் செலவுக்காக ஒதுக்கப்படும் பணத்தில் 25 ஆயிரம் ரூபாவை மாதாந்தம் செலவிட வேண்டியுள்ளது.

### திருமலையிலிருந்து தரைமார்க்கமாக

கொழும்புக்கு மேலதிகச் சிகிச்சைக்காக அனுப்பப்படும் நோயாளர்கள் கப்பல் மூலம் திருமலைக்கு அனுப்பப்படுகிறார்கள்.
அங்கிருந்து அவர்கள் பின்னர் தரைமார்க்கமாக கூட்டிச்செல்லப்படுகிறார்கள்.

### விமான மூலம் கொழும்புக்கு

மிக மோசமான நிலையிலுள்ள அவசர நோயாளர்களை விமான மூலம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் கொழும்புக்கு அனுப்புவதற்கான ஒரு முயற்சியும் ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்தது.
இதன்படி இங்கிருந்து ஏற்கனவே 3 நோயாளர்கள் கொழும்புக்கு அனுப்பட்டுள்ளார்கள்.
ஆனால் இந்த முறையைத் தொடர்ந்து பின்பற்றுவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன.

### மருந்துகள் கிடைத்தன

அண்மையில் கொழும்பிலிருந்து அடுத்த நான்கு மாதங்களுக்குரிய மருந்து வகைகள் எடுத்து வரப்பட்டன.

### ஏ. ஆர். வி. தட்டுப்பாடு

விசர்நாய்க்கடியினால் ஏற்பு நோய் ஏற்படாது பாதுகாப்பதற்காகப் போடப்படும் ஏ. ஆர். வி. தடுப்பூசி மருந்து பற்றாக்குறை யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பலரின் அநியாய உயிரிழப்புக்களுக்கு அண்மைக் காலத்தில் காரணமாக இருந்துள்ளது.
யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் இந்த ஏ. ஆர். வி. தடுப்பூசி மருந்து தொடர்ந்தும் தட்டுப்பாடாகவேயுள்ளது. இதற்கான காரணம் பற்றிக் கேட்கப்பட்டபோது-

### குளிருட்டிகள் அவசியம்

இந்த ஏ. ஆர். வி. தடுப்பூசி மருந்து குளிருட்டிகளில் வைத்தே கெடாமல் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று.

### ஒரு தடவை 2500 சி. சி. மட்டுமே

ஒரு மாதத்துக்கு ஒரு தடவை கப்பலில் சுமார் 2500 சி. சி அளவு ஏ. ஆர். வி மருந்தே யாழ். வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படுகிறது இதனை வைத்தே ஒரு மாதகாலத்திற்குச் சமாளிக்க வேண்டும்.
விசர்நாயினால் கடியுண்டவருக்கு 14 தடவைகள் ஊசிபோட வேண்டும் அதற்குச் சுமார் 52 சி. சி, ஏ. ஆர். வி. மருந்து தேவைப்படும்.

தொடர்ச்சி 4ம் பக்கம் ..

# நிகழ்வும் நினைவும்

-திலீபன்-

## இராஜ தந்திர நகர்வும் தேசத்துரோகமும்

### ■ நோர்வே நாட்டு உதாரணம் ■

கடந்த 17. 05. 1992 அன்று, நோர்வே நாட்டின் தேசிய தினக் கொண்டாட்டத்தினை பார்வையிடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

ஒவ்வொரு வருடமும் மே மாதம் 17ம் திகதி (நோர்வே நாட்டின் அரசியல் சாசனம் எழுதப்பட்ட தினம்) நோர்வே நாட்டின் தேசியதினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இத்தேசிய தினக் கொண்டாட்டங்களின் போது இராணுவ அணிவகுப்பு எதுவும் இடம்பெறுவதில்லை. சிறுவர் முதல் பெரியோர் வரை 'பாண்ட்' வாத்தியம் சகிதம் அணிவகுத்துச் சென்று நாட்டின் அரச குடும்பத்தினருக்கு மரியாதை செலுத்தும் நிகழ்வு இக் கொண்டாட்டத்தின்போது மிகவும் கோலாகலமாக இடம்பெறும்.

கைகளில் தங்களின் தேசியக் கொடியினை ஏந்திக்கொண்டு சிறுவர் முதல் பெரியோர் வரை மகிழ்ச்சி பொங்கிய முகத்துடன் இத் தேசிய தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டமை நிகழ்வினைப் பார்வையிடச் சென்ற அனைவரையும் பரவசப்படுத்தியது.

அதேநேரம், நாமும் எமது தேசியக் கொடியினைக் கைகளில் ஏந்திய வண்ணம் ஆனந்தமாக அணிவகுத்துச் செல்லும் நாள் விரைவில் உருவாக வேண்டும் என்ற எண்ணம் எனது நெஞ்சில் எழுந்தது.

எமது சிறுவர்கள், மாணவர்கள், பெண்கள், பெரியவர்கள் என சகலரும் எமது தேசியக் கொடியினை தமது கைகளில் ஏந்தியவாறு, மகிழ்ச்சி ஆரவாரத்துடன், 'உலகின் தமிழர்களுக்கான முதல் நாடு தமிழீழம்' என்ற பெருமித உணர்வுடன் தமிழீழத்தின் வீதிகளில் பவனி வரும் நாள் தொடர்பான காட்சிகள் எனது மனக் கண்ணில் தெரியத்தொடங்கின.

'அப்போது, எனது மௌனத்தைக் கலைத்த நண்பர் ஒருவர் தான் தேசிய இனக்கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள புறப்பட்ட போது நடைபெற்ற உரையாடல் ஒன்றிப்பற்றிக்குறிப்பிட்டார். இக்கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காகத் தான் பஸ் ஏற நின்ற போது நோர்வே நாட்டினைச் சேர்ந்த இரு பெண்கள், "இன்று நோர்வே நாட்டு Ice cream இனைத்தான் தாங்கள் வாங்க வேண்டும்" எனத் தமக்குள் பேசிக்கொண்டது தனது காதில் விழுந்ததாக அவ் நண்பர் கூறிக் கொண்டார்.

தமது நாட்டுத் தேசிய தினத்தன்று, தமது நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருளைத்தான் வாங்க வேண்டும் என்று இவர்கள் பேசிக்கொண்டது ஒரு வித தேச அபிமானத்தின் அடிப்படையில் தான் அமைந்திருக்கும் என நாமும் எமக்குள் பேசிக் கொண்டோம்.

இக்கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட நேரம் நோர்வேயின் வரலாற்றில் நடைபெற்ற இரு நிகழ்வுகளைப் பற்றி எனது மனம் அசைபொட்டுப் பார்க்கத் தொடங்கியது.

1905 ம் ஆண்டு நோர்வே சுவீடனில் இருந்து பிரிந்து தனிநாடாக அமைந்த போது முடியாட்சி முறைக்கு மாறாக குடியாட்சியினை அமைக்க வேண்டும் என்ற கருத்து மேலோங்கத் தொடங்கியிருந்தது.

குடியாட்சி முறைமையினை நோர்வேயில் அமைப்பதற்கு பலத்த மக்கள் ஆதரவு இருந்த போதும் இராஜதந்திர நோக்கின் அடிப்படையில் முடியாட்சி முறையினையே தொடர்ந்து பின் பற்ற முடிவு செய்யப்பட்டது. அப்போது பலமிக்க நாடுகளாக இருந்த 'ஐக்கிய இராட்சியம்', 'பிரான்ஸ்' போன்றவை குடியாட்சியினைக் கொண்டிருந்தமையால் முடியாட்சியினைப் பிரகடனம் செய்தால் அது 'புரட்சியாக' கணிக்கப்பட்டு நோர்வேக்கான சர்வதேச அங்கீகாரம் தடைப்பட்டு விடும் என்ற நோக்கின்அடிப்படையிலேயே முடியாட்சி முறையினைத் தொடர முடிவெடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. முடியாட்சியினை விட குடியாட்சி வரலாற்றில் முற்போக்கானதாகக் கணிக்கப்படுகின்ற போதும் அமைக்கப்படும் தேசத்தின் அங்கீகாரம் கருதி மேற்கொள்ளப்பட இவ் இராஜதந்திர நகர்வினை யதார்த்த ரீதியில் நோக்கில் புரிந்து கொள்ள முடியும்.

முடியாட்சிக்குப் பதிலாக குடியாட்சியினை நோர்வேயில் அப்போது பிரகடனப்படுத்தியிருந்தால் நோர்வே தனிநாடாக நீடித்து நிலைத்திருக்க முடியுமா என்ற சந்தேகம் இன்றும் எழுப்பப்படுவதுண்டு.

ஒரு தனிநாட்டினை உருவாக்கும் போது தத்துவ ரீதியாக 'முற்போக்கு' என்பதனை மட்டும் நோக்காது அங்கீகாரத்துக்கான பல்வேறு காரணிகளையும் நோக்க வேண்டுமென்ற விடயத்தினை இவ்வுதாரணம் சுட்டி நிற்கின்றது எனலாம்.

அடுத்தது, இரண்டாம் உலகமகாயுத்த காலத்தின் போது நிகழ்ந்த நிகழ்வின் வரலாற்றுப் பதிவின் நினைவு.

1940 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒன்பதாம் திகதி கிட்லரின் நாசப்படையினர் நோர்வேயின்ன ஆக்கிரமித்துக் கொண்டனர்.

இவ்வாறு நோர்வே மீதான ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்ட பின்னர் நாசிகளின் (Nagi) துணையுடன் விட்குன் குயிஸ்லிங் (VIDKUN QUISLIN-1887-1945) என்பவர் தனது தலைமையின் கீழ் புதிய அரசாங்கத்தினை அமைத்துக் கொண்டார்.

இவ்வரசாங்கம் அமைத்தலைமையினை தேசத்துரோகச்செயலாகவே நோர்வே மக்கள் கருதினர்.

இரண்டாம் உலக யுத்தத்தில் ஜேர்மனி தோற்கடிக்கப்பட்ட பின்னர் 1945 ஆம் ஆண்டு மே மாதம் ஒன்பதாம் திகதி quisiling கைது செய்யப்பட்டார்.

இவர் மீது தேசத்துரோகத் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு இராணுவ நீதிமன்றத்தின் கீழ் விசாரணை நடைபெற்று, 1902 ஆம் ஆண்டு இராணுவச் சட்ட விதியின்படி, இவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. இதன்படி ஆம் ஆண்டு October மாதம் 24 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் quisiling சுட்டுக் கொல்லப்பட்டார்.

அந்நிய ஆக்கிரமிப்புத் துணை நின்று அரசமைத்த Quisiling இனை தேசத் துரோகம் புரிந்தவராகவே இன்று நோர்வே நாட்டு மக்கள் கணிக்கின்றனர்.

பொதுவாக இன்று அந்நிய ஆக்கிரமிப்புக்குத் துணை நின்ற தேசத்துரோகம் புரியும் குழுக்களை 'Quisiling groups' என்ற அடைமொழியில் அழைப்பது சாதாரண வழக்காகி விட்டது. இவ் வழக்கு நோர்வேயின் வரலாற்றிலிருந்தே உருவாகியது.

அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவத்துடன் துணை நின்று செயற்படும் தேசத்துரோகிகளுக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும் என்பதனையும் நோர்வேயின் வரலாறு எமக்குக் காட்டுகின்றது.

சுருங்கக் கூறின், ஒரு புதிய நாட்டினை உருவாக்குவதற்கு பொருத்தமான, தேவையான இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்ளலும், தேசத்துரோகம் புரிபவர்களுக்கு உரிய விசாரணையின் பின் கடும் தண்டனை வழங்க வேண்டும் என்பதும் நோர்வேயின் வரலாற்றிலிருந்து நாம் பின்பற்றும் நடைமுறைகள் எனலாம்.

## விடுதலைப்புலிகளின்

எனவே ஒரு கடற்படையைக் கட்டி வளர்க்கப் பொருளாதாரப் பலமும் தேவை.

தமிழீழத்தைப் பொறுத்தவரை வெளியுலகத் தொடர்புகளுக்கும், போராட்டத்திற்குத் தேவையான விநியோகங்களுக்கும், அதற்குரிய செயற்பாடுகளுக்கும் கடலே பிரதான வழியாக இருக்கின்றது.

எமது தரை எல்லையை (சிறிலங்காவுடனானது) இதற்கு நாம் பயன்படுத்த முடியாது.

எனவே போக்குவரத்து, விநியோகங்கள், உலகத் தொடர்புகள், யாவுமே கடல் மூலமே உள்ளன. எனவே தான் எதிரி வைத்திருக்கும் கடலாதிக்கத்தைத் தகர்த்து கடற்பரப்பில் அவனது நடமாட்டத்தைத் தடுக்க வேண்டியது, மிகமிக அத்தியாவசியமானது. அப்போது தான் எமது தாயகப் போர் வெற்றிபெற முடியும்.

1984 ஆம் ஆண்டிலிருந்து கடற்புலிகள் என்ற பெயரால் அழைக்கப்பட்ட எமது கடல் அணி, 1991 ஆம் ஆண்டு பிற்பகுதியில் 'விடுதலை புலிகளின் கடற்புலிகள்' என்ற புதிய பெயருடன் பெரியளவில் விரிவாக்கம் செய்யப்பட்டது.

இக்காலத்தில் இதன் சிறப்புத் தளபதியாக திரு. சூசை அவர்களும், தளபதியாக திரு. கங்கை அமரன் அவர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இக்காலத்திலேயே சிறீலங்காக் கடற்படையினர் மீது கடலில் வைத்தும், கடற்கரையோரங்களில் உள்ள காவல் அரண்கள் மீதும் பல வெற்றிகரமான தாக்குதல்களைக் கடற்புலிகள் நிகழ்த்தினர்.

இத்தொடரான தாக்குதல்களின் போது,கனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட விசைப்படகுகள் சில பல்வேறு முனைகளிலும் தாக்கி அழிக்கப்பட்டன.

ஆனையிறவு கடல் நீரேரியில் வைத்து 41 அடி நீளமான அதிவேக சண்டைப்படகொன்று கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது. அத்துடன் நடுக்கடலில் வைத்து சிங்களக் கடற்படையுடன் வெற்றிகரமான படகுச் சண்டைகளிலும் கடற்புலிகள் ஈடுபட்டுள்ளனர்.
இக்கடற் தாக்குதல்களிலும் கடற் சண்டைகளிலும் கணிசமான சிங்களக் கடற்படையினர் கொல்லப்பட்டதுடன் அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

கடற் கண்ணித் தாக்குதல்களை நிகழ்த்துவதில் இருந்து, நவீனமயப்படுத்தப்பட்ட சிங்களக் கடற்படைக்கெதிராக நேரடித்தாக்குதல்களையும், கடற் சண்டைகளையும் நடத்தக் கூடிய அளவிற்கு விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணியினர் பெற்ற வளர்ச்சி, சிறீலங்காவின் படைத் துறைத் தலைமையைத் திணறடித்துள்ளது. இதன் காரணமாக, கடற்படையின் பலத்தை நம்பி போராட்டத்தை நசுக்க அவர்கள் உருவாக்கிய, நீண்டகால நோக்கிலான போர்முறைத் திட்டமும் கேள்விக் குறியாகிவிட்டது.

அத்துடன் அண்மைக் காலத்திலிருந்து, தமிழீழக் கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படையின் மேலாதிக்கம் படிப்படியாகச் சரிந்து கொண்டிருப்பதையும் காணலாம். அதனால் தமிழீழம் மீதான தனது ஆக்கிரமிப்பு போர் மிகப்பெரிய பின்னடைவை எதிர் நோக்குவதையும், சிங்கள ஆளும் வர்க்கம் உணரத்தொடங்கியிருக்கும்.

தமிழீழக் கடலன்னை தியாகத்தாலும், சோகத்தாலும் உருவான ஒரு மகத்தான காவியத்தை தன்னுள் கொண்டிருக்கிறாள்.
எத்தனை இனிய தோழர்கள்,
எவ்வளவு திறமையான கடலோடிகள்,
மீனுக்கு இணையான நீச்சல்காரர்கள்,
தியாகத்தின் உயர்வடிவமான கடற் கரும்புலிகள்.

சாவு வரும் என்பதை தெரிந்தும் இவர்கள் பயணம் போனார்கள். ஒவ்வொருமுறையும் அவர்கள் பயணம் போனபோது கரையிலே நின்று கை வீசி அனுப்பிவைத்தோம். ஆனால் நாம் பார்த்துக் கொண்டிருந்த போதே, அந்தப் பரந்த கடலோடு கரைந்து போனவர்கள் பலர்.

தமிழீழக் கடலன்னையின் மடியிலேயே இரவும் பகலும் கிடந்து, பனியையும் குளிரையும், தம்முயிரையும் பாராது கடலோடிய தமிழீழத் தாயின் புதல்வர்களில் எத்தனையோ பேர் அந்த உப்பு நீருடனேயே சங்கமமானார்கள்.

இது எங்கள் கடல். இது தமிழீழத் தாயகத்தின் இணைபிரியாத ஒரு அங்கம். அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து இது மீட்கப்பட வேண்டும். அதற்காகவே கடற்புலிகள் உயிரையும் மதியாது பயணம் போய், உன்னதமான தியாகங்களைப் புரிந்து, வீர காவியங்களைப் படைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு நாள் நிச்சயமாக எங்களின் கடற்படைக் கப்பல்கள் எங்களின் கடலில் பவனிவரும்; அப்போது எங்களின் இளைய பரம்பரையினர் பயமின்றி, சுதந்திரமாக எங்களின் கடலில் உலாவருவார்கள்.

## தந்தையும் தனயர்களும்

"அம்மா - குணமண்ணை...." பூமணி மாமி வெளியே வந்தாள். சின்னையர் தளர்ந்த நடையுடன் வந்துகொண்டிருந்தார்.

" என்ன .....என்...-ன...ப்பா....?
"குணத்தான்......."
பூமணி மாமி வீட்டுக்குள் ஓடினாள். நிலையில் தலையை அடித்தடித்து ஏதேதோ எல்லாம் சொல்லி அழுதாள். அவளின் மனதின் தாகங்களை வெளிப்படுத்த முடியாமல், வார்த்தைகளைப் பேசும் சக்தியற்று-இது வரை நாளும் கதைகளைப் பேசிய கைகள் அர்த்தமற்று அசைந்தன.

காற்றுக்கு மட்டும் விளங்கும் அவள் குரல், ஊர் முழுவதும் இதயத்தை வெடிக்கவைத்து விடும் சோகத்துடன் பரவியது. சின்னையர் தளர்வுடன் திண்ணையில் இருந்தார். கைகள் துப்பாக்கியை இறுகப் பற்றியவாறே இருந்தது.

அன்று கடற்காற்று மிக மோசமாக இருந்தது. அலைகள் பெரிய சத்தத்துடன்-கரையை மோதின. தென்னைகள் நிலத்தைத் தொட்டு விடுமாற்போலத் தடுமாறின. கடலில் பீரங்கிப் படகு ஒன்று அவலப்பட்டு அங்கும் இங்கும் ஓடி ஓடியே கண்டபடி குண்டுகளை வீசியது. இராட்சத விமானங்கள் இரவிலும் வந்து, குடிமனைகள் மீது குண்டுகளைப் போட்டன.

" அவங்களிலையும் சரியான இழப்பாம்" ஊர் கூடிப் பேசிக்கொண்டது.

* * * *

பூமணி மாமியின் மூத்தமகன் பல்கலைக்கழகத்திலிருந்து வந்தான். தன்னால் இயன்ற மட்டும் விடாமல் அழுதான். பூமணி மாமி, சிறுவயதில் செய்தமாதிரியே அவன் தலையை ஆறுதலாகக் கடவி விட்டாள்.
சின்னையர் இப்போதெல்லாம் இரவும் பகலும் காவலுக்குப் போகத்தொடங்கி விட்டார். அந்தத் துப்பாக்கி அவரின் உடலுடன் ஒன்றிப்போய் விட்டது.

ஊரில் கதை பரவியது.

"செல்வனும் சரியான திறமைசாலியாம்"

" அவன் குணத்தானை மாதிரி-தமையனை மாதிரி-அவனும் கெட்டிக்காரன்". மாமி மனதுக்குள் சொல்லிக் கொள்வாள் . இப்போதும், எங்கு சண்டை நடந்தாலும் பூமணி மாமி அந்தப் பாம்பு போன்ற கரிய நெடுஞ்சாலையை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டு நிற்பாள்.

அந்த அழகான பச்சை நிற வாகனம், வீதியை ஒட்டிப்பிடித்தபடியே அமைதியாக வரும்; பூமணி மாமியைக் கண்டதும் நிற்கும். பூமணி மாமிக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்லும் அந்த அன்பு நிறைந்த-கனிவான இளைஞன் இறங்கி வருவான். அவனது இடுப்பில் நட்சத்திரம் இடப்பட்ட கைத்துப்பாக்கி அழகாகப் பொருந்தியிருக்கும். குணத்தான் மாதிரி ஒரு பக்கம் இழுத்தபடியே, அவன் நடந்து வருவான்.

# விழுது விடும் வரை

மந்தாரம் போட்டதால் மழை பெய்யும்
என்று இருந்தோம்
வந்த சிறு தூற்றலோடு வானம் வெளிறிப்போய்
எந்த அசுமாத்தமும் இல்லாது
மண் மணக்கும் அந்திவரை;
மீண்டும் அடி நிலத்தில் வைக்கேலா(து)
வெந்து விடும் பாதம்
வெளியில் நடந்தாலோ?

நேற்று வரை தோண்டி
நிலமடந்தை காட்டுகிற ஊற்றுக்கண் கொண்டே
உயிர் வாழ வைத்த பயிர்
நாற்றுப் பதியனிலும்
பாத்தியிலே பூ பிஞ்சாய்
காற்றோடு சாய்ஞ்சு நிமிர்ந்த கதிர்
முற்றாப் பாற்பருவம்
எல்லாம் ஏன் பஞ்சடைஞ்சாற் போலிருக்கு?
கட்டுக் குலையாமல் காய் சுமந்த தென்னைகள்
ஏன் வட்டுதிர்ந்து
இன்றைக்கு வாழ்விழந்த பெண்களைப் போல்
மட்டை உரிந்து விழ வாடி மடிகிறது?
'நிலாவரை நீர்மட்டம் கீழிறங்கிப் போச்சாம்'
'பலாலி வரை பனையும் படத் தொடங்கி விட்டுதாம்'
என்ற கதைகள் அடிபடும்
என்றாலும்;
என்றும் உடம்பாலே குருதி மழை பொழிய
சின்றழைப்போம்


ஈழத்தை நேசிக்கும், நாங்கள் எல்லாம்
அக்கரையில்
எம்மை அடிமைப் படுத்த வந்தோர்
தக்காளிக் கும்பியாய்
தலை கால் தசை சிதறக்
கொத்த வைத்தார் காகம்
நம் குஞ்சுப் பரம்பரைகள்.

கத்துகிறார் வாய்கிழிய ஏதோ?
கருணை வெள்ளம் அத்தனையும்
தம்மிடமே ஊற்றெடுப்பதாய் அந்தோ!
'மழலைப் பட்டாளம் மடைப் பெடியள்'
என்றவரேன் அழாக்குறையாய் இத்தனை நாள்
ஏனாம் அலட்டுறார்?

மந்தாரம் போட்டால்
மழைவரும் என்றிரோம்
சொந்தக் கரத்தாலே சொர்க்க சுதந்திரத்தை
இந்தத் தமிழீழ மண்ணில்
மரமாக்க
வெந்து கரைவோம்
விழுது விடும் வரைக்கும்
சந்ததியாய்ச் செய்வோம் சமர்.

■ கல்வயல் வே. குமாரசாமி ■

## தலைமுறையாய்த் தொடரும்.....



வாழ்க்கையை பணயம் வச்சு ஒவ்வொரு கணமும் மரணத்தோட போராடிக்கிட்டிருக்கிற பிரபாகரனும் நீங்களும் ஒன்னா? துப்பாக்கியால் மட்டுந்தான் மனிதர்களுக்கு சாவுன்னு நினைக்காதீர்கள்.

துப்பாக்கி ஏந்திய பிரபாகரன் நூறு வயசு உடல் ஆரோக்கியத்தோடு இருக்கலாம். கதை எழுதுகிற நான் நாளைக்கே மரணமடையலாம் உண்மையில் என்னைவிட பிரபாகரனுக்கு வாழ் நாள் பெரியது.

"எப்படி.... எப்படி...."

இன்னும் பத்துத் தலைமுறைகளுக்கும் பிரபாகரன் கதை பேசப்படும். சிலையாய், சித்திரமாய், கவிதையாய் உயிர் வாழ முடியும் என் கதைகள் இரண்டு தலைமுறை தாண்டுமா.... சந்தேகம் தான்.

தனது நாவல் ஒன்றில் தென் இந்திய எழுத்தாளர் 'பாலகுமாரன்' ■






U.T.O
54 Tavistock Place
London WC1H 9RG
Tel: 071-837 7162
Fax: 071-278 5666

T.C.C
341 Rue Des Pyrenees
75020 Paris
France
Tel: 435 81142
Fax: 435 81191

Tamil Confederation
P.O.Box 340251
5270 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo
Italy
Tel/Fax: 091-611 3179

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1
Norway
Tel: 02-191260
Fax: 02-190114

W.T.C.C
Hofjecklin
7415 Rodels
Switzerland
Tel: 077-816609

W.T.C.C
P.O.Box 694
Mulgrave North
Victoria 3170, Australia
Tel: 03-457 6347
Fax: 03-561 8224